ஜனவிநோதினி.

இல. 7.] ஜூலைமீ 1875. [புஸ்த. VI.

சீஞ்காகிதம் செய்ய உதவும் செடி.

மிருகங்கள் பட்சிகள் முதலிய தாவரசங்கம சாஸ்திரப்பொருள்களின் சித்திரங்களை எழுதுவதற்கு சீனுதேசத்தார் ஓர்விதமான கடிதத்தை உபயோகித்துவருகிறார்கள். அது மிகவும் வழவழப்பும் நொய்மையும் உள்ளது. அதன் உண்மையான தன்மை சில வருஷங்களுக்குமுன்னேதான் கண்டறியப்பட்டது. அரிசியை ஏதோ ஒருமாதிரியாய்ப் பக்குவப்படுத்தி அதனால் அந்தக் கடிதம் செய்யப்படுகிறதென்று தப்பான எண்ணத்தின் காரணமாய் அதற்குச் சோற்றுக்கடிதம் என்னும் பெயர் சாதாரணமாய் வழங்கிவருகிறது. உண்மையாய் அது ஓர்வகையான செடியின் சடையினால் உண்டாகிறது; அதை டங்ட்ஸா என்று சொல்லுகிறார்கள். அந்தப் பெயருக்கு போலான் செடி என்று அர்த்தம். (Formosa) பார்மோஜா என்னும் தீவினுடைய வடபாகங்களில் இருக்கும் குன்றுகளில் அது விஸ்தாரமாய் உற்பத்தியாகிறது. அவ்விடத்தார் அதை சீனுவுக்குக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக சரக்கு மாற்றிக்கொண்டுபோகிறார்கள். அந்தச் செடி மிகவும் மெல்லியதாயிருக்கும்; தளிர்விட்டுப் புஷ்பிக்கத்தொடங்கினபிறகு இருபது முப்பது அடி உயரம்வரைக்கும் வளரும். ஆகிலும், நாள் ஆக ஆக செடியின் சடை குறைந்துபோகிறதாமாகையால் பத்து பன்னிரண்டு அடி வளர்வதற்குமுன்னமேகூட வெட்டிப்போடுகிறார்கள். செழிப்பாய் வளருமாயின் அது விசாலமான இலைகளோடுகூடி மஞ்சள்நிறமுள்ள சிறுபுஷ்பங்கள் நிறைந்து பார்வைக்கு மிகவும் அழகாயிருக்கும்.

சடை உற்பத்தியாகும் செடிகள் இன்னும் சில உண்டு. இத்தேசத்திலுண்டாகும் (Shola) ஷோலா என்னும் ஒருவகைச்செடியும் படத்தில் காட்டியிருக்கும் செடியும் ஒரே ஜாதியென்று முற்காலத்தில் அநேகம்பேர் நம்பியிருந்தார்கள். (Singapore) சிங்கப்பூரில் அதின் சடையை தெப்பற்கட்டைகள் கட்டிக்கொண்டு கடலில்போவதற்கும் தலைப்பாகைகளாகச் செய்து தரித்துக்கொள்ளுவதற்கும் விசேஷமாய் உபயோகித்துவருகிறார்கள். ஆகிலும் இந்தச் சடை சீனச்சடையைவிட வர்ணத்திலும் குணத்திலும் கொஞ்சந் தாழ்ந்தது. (Taccadœ) டக்காடா என்னும் ஒரு செடி இந்தத் தேசத்திலும் இலங்கைத்தீவிலும் கடலோரங்களில் அநேகமாய் நீண்டுவளருகின்றது. அதன் சடை பருமனும் உறுதியும் வெண்மை நிறமுமுள்ளது. (Malays) மலேயரும், (Siamese) ஸையாம் தேசத்தாரும் அதைச் சித்திரவேலைகள் செய்வதற்கு உபயோகப்படுத்திவருகின்றனர். அதனால் விசேஷதினங்களுக்கும் உற்சவகாலங்களுக்கும் உரிய புஷ்பங்கள்முதலிய பல விசித்திரமான ஆபரணங்கள் செய்கிறார்கள். இங்கிலாந்திலும் ஒருவித செடியினின்று சடை உண்டாகிறது; அது மிகவும் பருத்ததாயிருந்தாலும் யாதொரு வேலைக்கும் உபயோகப்படுத்தப்படுகிறதில்லை. சீனதேசத்தாருடைய உபாயத்தை அனுசரித்தால் சடையைப் பக்குவப்படுத்தி நானாவித வேலைகளுக்கு உபயோகிக்கலாம்.

பழைய நேசர்கள்.

முன் இரண்டு சஞ்சிகைகளில் சிநேகத்தையும் சிநேகிதர்களையும் பற்றிப் பொதுவாய் எழுதினோம்; இப்போது பழைய நேசர்களைப்பற்றி எழுதுகிறோம். பழையநேசர்களைப்பற்றி அநேகர் அநேகவிதமாய் அங்கங்கே புகழ்ந்து பேசியிருக்கிறார்கள்; அவையெல்லாம் உண்மையே. ஆனால் அப்படிப்பட்ட நேசர்களைத் தேடுவதுதான் அசாத்தியம். அவர்களுடைய சுபாவம் இப்படிப்பட்டதென்று நம்மால் சொல்லிமுடியாது. அப்படிப்பட்டவர்களோடு ஒருகால் நேசித்தால் அவர்கள் மறுபடி நாம் உயிரோடு இருக்குமளவும் நம்மைவிட்டுப் பிரியார்கள். நமக்கு வேண்டும்போது உதவி செய்யக் கைகட்டிக்கொண்டு காத்திருப்பார்கள். நமக்கு ஓர் உயர்வுவந்தாலும் பொறாமைப்படாமல் ஸந்தோஷப்படுவார்கள்; துன்

மைவந்தாலும் கைவிடாமற் காப்பாற்றுவார்கள். அவர்களால் நமக்குக்கிடைக்கிற ஸஹாயம் இவ்வளவவ்வளவென்று வாயினால் சொல்லக்கூடுமோ? பழகப்பழக அதிலிருக்கின்ற லாபமும் ஸந்தோஷமும் மற்றெங்கேயுண்டு? ஓரிடத்திலும் கிடையாது. ஆனால் நாம் இப்போது தெய்வப்பிறப்புள்ள அந்த நேசர்களுக்கு எங்கேபோகிறது? அத்திபூத்ததுபோல் அவர்களைக் காணவேண்டுமேதவிர வேறில்லை. முற்பிறப்பில் பெருந்தவமியற்றினவர்களுக்கு ஒருவேளை கிடைக்குமோ என்னவோ தெரியாது.

இக்காலத்திலிருக்கிற பழையநேசர்களுடைய தன்மையைக் கேட்டாலோ வெகு விசித்திரமாயிருக்கும். இந்தப் பழையநேசமென்பது நமக்கு எவ்விதத்திலும் கைகொடுப்பதற்கு ஏதுவாயிருக்க, அதைவிட்டுத் தக்கவிடம் தகாதவிடமென்றில்லாமல் கண்டவிடத்திலும் ஒன்றுகிடக்கவொன்றாய்ப் பரிஹாஸமும் வேடிக்கையுமாய்ப் பேசி மானபங்கப்படுத்தி நம்மைச் சீரழிக்க ஏதுவாக்கிக்கொள்ளுகிறார்கள். அவர்களுடைய நடத்தைகளை ஒவ்வொன்றாய் எழுதப்புகுந்தால் நம்மால் முடியுமோ? புஸ்தகத்திலிடந்தான் போதுமோ? ஆனால் அவர்கள் அப்படிச் செய்வதெல்லாம் வேண்டுமென்று நமக்குக் கெடுதிசெய்ய நினைத்தன்று. பின்னென்னவெனில், அறியாமையின் காரியமே. அவர்களுக்கு வேளை ஸமயமென்கிற தொன்றும் தெரிகிறதில்லை. நாம் எந்தக்காரியத்திலிருந்தாலும் எந்தச் சங்கடப்பட்டுக்கொண்டிருந்தாலும் பழையசிநேகத்தையே பெரிதாய்ப் பாராட்டிக்கொண்டு நம்மண்டைவந்து நச்சுநச்சென்று நம்முடைய யோகக்ஷேமங்களை விசாரித்து தங்களுக்குத் தோன்றியவைகளையும் சொல்ல ஆரம்பிப்பார்கள். இது ஸமயமன்று அப்புறமாகட்டுமென்று நல்லதனமாய்ச் சொன்னாலும் கேட்கமாட்டார்கள். வெகுநாளாய்ப் பரிசயமாயிருக்கிறவர்களை நாம் எப்படி வெருட்டிப்போகச்சொல்லுகிறது.

நாம் புதிதாய் ஒரு பெரிய மனிதனுடைய பிரீதிசம்பாதிக்கவேண்டுமென்று அவனண்டைபோய்ப் பேசிக்கொண்டிருக்கும்போது நம்முடைய பழைய நேசர்கள் நடுவே வந்து, அடபயலே! உன் சுபாவத்தை யாரும் அறியாரோ? இப்போதான் வானத்தினின்றும் குதித்தவன்போலப் பேசுகிறாயே? இந்த வேஷமெல்லாம் யாரண்டைபோடுகிறாய் என்று இப்படி பலவிதமாய் நம்மைப் பரிஹாஸம்பண்ணுவார்கள். இவைகளையெல்லாம் அந்தப் புதுமனிதன் கேட்டால் நம்மைக் காசுக்குமதிப்பனா? இப்படியே அந்தந்தச் சமயங்களில் தங்களுக்குத் தோன்றியபடி பேரிட்டுக் கூவுவார்கள். அவைகளைக் கேட்டால் நமக்குப் பிராணன்போவதுபோலிருக்கும். இவ்விதமாய் நம்முடைய வாஸ்தவஸ்திதியைத் தெரிவிப்பதுபோலப் பாவித்து, நம்மை அகடுகழிப்பதைவிட அவர்களுக்குப் போ

னந்தம் வேறென்றுமில்லை. அடிக்கடி நம்மண்டை ஓடிவந்து அறு பதுநாழிகையும் நச்சுநச்சென்று தொனுப்புவார்கள். அவர்கள் தொந்தரை ஒரு நிமிஷமாகிலும் நமக்கு ஓய்ந்திராது. ஆகையால் எந்தக் காரியந்தான் அவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு சின்னபின்னமாய்ப் போகாமல் நன்றாய் முடியும்? நாம் நம் வேலை யாளர்களுக்குக் கடினமாய் எந்தக் கட்டளையிட்டிருந்தாலும் அதை மீறிநடப்பார்கள். இப்படியே நாம் எவ்விதமான ஏற்பாடுகள் செய் திருந்தாலும் அவைகளையெல்லாம் தம் பழையநேசத்தின் பலத்தைக் கொண்டு அதிக்கிரமிப்பார்கள். அதற்குப் பதிலாய் நாம் அவர் களை என்னசெய்யக்கூடும்? ஆதலால் நாம் எந்தவேலைசெய்யப் புகுந்தாலும் அந்தப் பழையநேசர்களைமாத்திரம் கவனமாய்ப் பா ர்க்கவேண்டும். இவனுடைய பொன்னானகாலத்தைப் பழுதாக்கு கிறோமேயென்று அவர்களுக்கே தோன்றவேண்டும். அவர்களுக்கு அந்த நினைவும் கிடையாது, ஏதாவது சொல்லப்போகிறானேயென் கிற அச்சமுங்கிடையாது. வேடிக்கையாய்ச் சிரித்துக்கொண்டு வம் பளப்பும் வீண்வாதமும் செய்துகொண்டிருப்பார்கள். அப்படி அவர்கள் கேட்கிற கேள்விகள் சரியானதாயிருந்தால் நாம் தக்க படி உத்தரம்சொல்லியனுப்பலாம். அப்படியும் இராது. நாம் பதில் சொல்லக்கூடாததாய் என்னவோ கதறிக்கொண்டிருப்பார்கள்.

நாம் வாலிபராய் ஒன்றும் நாகரிகந்தெரியாமல் விளையாடிக் கொண்டு இருக்கும்போது நம்மோடு பழகிய சில பூர்விகநேசர்கள், பின்பு நாம் எவ்வளவு உயர்ந்தஸ்திதிக்கு வந்தாலும் சிறிதும் கனப்படுத்தார்கள். நாம் ஒரு அதிகாரஸ்தானத்திலிருந்தாலும் அங்கே வந்து பழைய வழக்கப்படி அடமொட்டே! அடதொப்பை! அடசப்பாணியென்று வாலிபத்தில் வேடிக்கையாய் வழங்கின பேர்களைச்சொல்லிக் கூவுவார்கள். ஆண்பிள்ளைகளாயிருந்தால் இப் படி அழைப்பது அவ்வளவு தீங்கு உண்டாக்காது; மானக்கேடென் பது ஒன்றேதவிர வேறில்லை. பெண்பிள்ளைகளாயிருந்தால் எவ்வ ளவு அபாயமுண்டாகும் பாருங்கள்? ஒரு பெண்பிள்ளையோடு சிறுவயதில் பழகிக்கொண்டிருந்த ஒருவன், அவள் தன் புருஷன் வீட்டிற்குப்போய் கனமாய் வாழ்ந்துகொண்டிருக்கும்போது அவ ளண்டைபோய் அடிநொள்ளைக்கண்ணி! நீ இப்போது செல்வத்தில் மூழ்கியிருக்கிறாயே என்று புன்னகையோடு பேசுவான். அதைக் கேட்டவர்கள் என்னநினைப்பார்கள். இதுவல்லாமல் பக்கத்தில் பல்லைஇளித்துக்கொண்டிருக்கிற அவளுடைய புருஷனைப்பார்த்து அடா, உனக்கு என்ன அதிஷ்டம் வாய்த்ததடா! கிளிபோல பெண் ணைத் தட்டிக்கொண்டுபோனையே என்று சொல்லுவான். அந்தப் புருஷன் ஆண்மையில்லாதவனாயிருந்தால், இவன் தன்னை என்ன வோ புகழ்ந்துபேசுகிறானென்று அவன் காலண்டைவந்து வெட்

கங்கெட்டு விழ்ந்துகிடப்பான். அந்தப் புருஷன் அறிவுள்ளவனு யிருந்தால் இம்மாதிரியான பழையநேசனை அந்த நாட்டிலேயேயி ருக்கவொட்டாமல் துரத்தியடிப்பான். அந்தப் பெண்பிள்ளையும் அதைக்கேட்டு வெட்கி மனங்குமுங்கி இதென்ன வெட்கக்கேடெ ன்று தலைகுனிந்துநிற்பாள். அப்படிச் செய்வதனுலுண்டாகிய கெடுதி இவ்வளவவ்வளவன்று.

இப்படி அடிக்கடி நம்மை விடாமல் எப்போதும் பின்ருெடர் ந்துகொண்டிருக்கிறவர்கள் மனதிலேதோ ஒரு எண்ணமிராமல் அப்படித் திரியமாட்டார்கள். நம்முடைய அண்ணன்தம்பிகளைப் பார்க்க நெருங்கின் நேசர்போலப் பாவித்துக்கொண்டிருந்து, கடை சியில் தாங்கள் நம்மிடத்திலிருந்து மிகுந்த லாபமடையலாமென்று எண்ணிய எண்ணத்தை மெதுவாய் வெளிப்படுத்துவார்கள். அப் படி அவர்கள் கேட்கும்போது அதற்கு நாம் எதாவது கொஞ்சம் தடங்கல்சொல்ல ஆரம்பித்தால் அதையே காரணமாகக்கொண்டு தெருத்தெருவாய் நம்மைத் தூற்றப் புறப்படுவார்கள். இந்த அற் பப்பயலின் சுபாவம் எனக்கு அன்றைக்கே தெரியுமே. இவன் அடிநாளில் பட்டபாடு யாருக்குத் தெரியாது. என் வீட்டுச்சோற் றைத்தின்று பிழைத்ததாய்த் தோன்றவில்லையோ? அப்படி அடி நாளில் காப்பாற்றிவிடவே இப்போது ஒருவரும் ஆகாதென்று கருக்கிருன். இவர்கள் அடிநாளில் அல்லாடின அல்லாட்டம் என் பாட்டியைக்கேட்டாலல்லவோ தெரியும். இவன் பாட்டன்நா ளில் இவ்வளவு சோறு அறிவானு? இவன் அப்பன் பாட்டன் முதலிய யாவரும் என் பாட்டிகைச் சோற்றினுலே வளர்ந்தவர்க ளல்லவா? இப்போது என்னவோ ஒரு காசு கையில் அகப்பட் டதென்று தலைதுள்ளிப்போகிறதே? அற்பம்பணம்படைத்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிக்கும் என்பது பொய்யோ? சிறிதும் நன்றியில்லாமலிருக்கிற இந்த லோபியைப்பற்றி நமக்கு என்ன? இவனை யார் துப்புகிருர்கள்? இந்த வாழ்வெல்லாம் எத்தனைநாளைக் கோ பார்ப்போம் என்று இப்படி பலவிதமாய்க் காதில் கேட்க வழங்காமல் வீடுவீடாய் நுழைந்துபோய்ச் சொல்லிவிட்டுவரு வார்கள். விசாரிக்கப்புகுந்தால் இவையொன்றும் உண்மையா யிராது. நமக்குப் புதிதாய் யாராவது சில நேசர்களிருந்தாலும் அவர்களெல்லாம் இந்த அவதூறைக்கேட்டு மெய்தானென்று எண்ணி நம்மை விட்டுப்பிரிய எத்தனிப்பார்கள்.

சிலர், தற்செயலாய் ஒருகால் நம்மோடு ஸம்பாஷணைபண்ணி யிருந்தாலும், கொஞ்சம் போக்குவரவு செய்துகொண்டிருந்தாலும் அவைகளையெல்லாம் பெரியகாரணமாகக்கொண்டு ஆயுள் உள்ள ளவும் நம்மோடு நேசம்பாராட்டக் கருதுவார்கள். அப்படிக்கு நினைப்பதெல்லாம் தாங்கள் நம்மிடத்தில் அன்பாயிருந்து நமக்கு

ஆதரணைசெய்யவேண்டுமென்றன்று. பின்னென்னவெனில், உலகமெங்கும் தாங்கள் நமக்கு நேசர்களென்று காண்பிக்கவும், தங்களுக்கு வேண்டும்போதெல்லாம் நாம் பலவிதமாய் உதவிசெய்யவும், தாங்கள் எப்போது என்னசொன்னாலும் அதற்கு யாதொரு தடங்கலும் செய்யாமலிருக்கவும், நம்வீட்டில் என்ன ரகசியங்கள் நடந்தாலும் அவைகளையெல்லாம் பகிரங்கமாய்த் தங்களுக்குத் தெரியப்படுத்தவும், நாம் எந்த மரியாதைஸ்தலத்திற்குப்போனாலும் தங்களையும்கூட அழைத்துக்கொண்டுபோய் நமக்குச் சரியாய் மரியாதை செய்விக்கவும், எப்போது எந்த லாபம்கிடைத்தாலும், அவைகளையெல்லாம் பேருக்குப்பாதி பங்கிட்டுக்கொடுக்கவும், அவர் பரிகாசமாய்ச் சொல்லுகிற மானக்கேடான வார்த்தைகளையெல்லாம் சிறிதும் முகஞ்சுளியாமல் கேட்டுக்கொண்டிருக்கவும்,' நாம் செய்யும் காரியங்களெல்லாவற்றிலும் அவர்களையும்கூடக் கலந்துகொள்ளவும், வெகுவாய் நம்மைப் பார்க்கத்தாம் ஒரு பங்கு மேலாயிருக்கவும் முதற்காரணமாய் எண்ணிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் நமக்குக் கைப்பணம்போட்டு தேகசிரமப்பட்டுக் கலியாணம்பண்ணுவித்தார்களோ? அக்காலத்தில் பலரும் வந்ததுபோலத் தாங்களும் வந்து போஜனம்பண்ணியிருப்பார்கள். அப்படியிருக்கக் கண்டபோதெல்லாம் வீடுவீடாய்ப்போய் இவனுக்குப் பெண்ணைக் கொடுப்பித்தது யார்? நான் இல்லாமல்போனால் இவன் வாழ்வு அப்போதே தெரியாதா? இவன் கலியாணத்திற்கு நான் தலையாலுழைத்தேனே; முதலில் இவனை வளர்த்ததுயார்? எவ்வளவு மாந்தமோ சுரமோ அவைகளெல்லாவற்றிற்கும் ஈடுகொடுத்து காப்பாற்றினேனே இவன் தொப்புள் அறுத்த கத்திமுதற்கொண்டு என் கையிலிருக்கிறதே என்று தமுக்கு அடிப்பார்கள். சிலர், தாங்களே நம்மைப் பாடசாலைக்கனுப்பிப் படிப்பித்து அறிவுண்டாக்கி உத்தியோகம் பண்ணுவித்ததாயும், நாம் செய்த உபந்நியாசங்களைத் தாங்களே வெளியிட்டு நம்முடைய பேரைப் பிரசித்திபண்ணினதாயும், நமக்கு வந்திருக்கிற அபிவிர்த்தியெல்லாம் தங்களாலேயே வந்ததாகவும் எண்ணிக்கொண்டு, அதற்குத்தக்க வெகுமானங்களுங் கிடைக்கவேண்டுமென்று ஆசைகொண்டு இருப்பார்கள். அவர்கள் எண்ணத்திற்கு ஏதாவது கொஞ்சம் விரோதமாய் நடந்தோமானால் நாம் நன்றியற்றவர்களென்று கூவத்தொடங்குவார்கள். இன்னும் இவ்விதமாய்ப் பழையநேசர்களுடைய சரித்திரங்கள் பலவுண்டு. அவைகளையெல்லாம் சொல்லப்புகுந்தால் நம்மால் முடியுமா? இவைகளுக்கு நாம் செய்யவேண்டிய மருந்து என்னவென்றால், அவர்களென்னதொந்தரவுசெய்தாலும் பேசாமல் மவுனமாயிருக்க வேண்டுவதே. அப்படியன்றி அவர்கள் சொல்வதைக் கேட்கக் கொஞ்சமிசைந்தால் அடிக்கடி நாம் தாங்கக்கூடாத சுமையை நம் தலைமேல் தூக்கிவைப்பார்கள்.

இவர்கள்தவிர நமக்கு அத்தான், அம்மாஞ்சி, அம்மான், மருமகன் என்று பேரிட்டுக்கொண்டு அநேகம் பழையநேசர்களிருப்பார்கள். அவர்கள் தாங்களே நம்மைப் பெற்றுவளர்த்தெடுத்த தாய் நம்முடைய தாய்தந்தையர்களைப்பார்க்க அதிக பாத்தியத்தைக் கொண்டாடி அட்டைபோல் வந்து நம்மைக் கவ்விக்கொள்வார்கள். அவர்களை நாம் உதறிவிடுவோமென்று எவ்வளவு முயன்றாலும் நம்மால் முடியாது. அவர்கள் அப்படியிருப்பதற்குக் காரணம் அடிநாள்முதல் நம்மை அறிவார்களென்பதே. அவர்கள் நம் தகப்பனூர்காலத்திலும் இப்படியே தொந்தரைசெய்தவர்கள்தான். அவர்கள் மிகவும் ஈனஸ்திதியில் இருப்பதனால் நம்மை வருத்தும்படி நேரிடுகிறதென்று சிலர் சொல்லுவார்கள். அது உண்மைதான். அதற்கு நாம் என்னசெய்யலாம்? அவர்களுடைய அபிப்பிராயங்களும் நடத்தைகளும் ஒருபோதும் நமக்கு ஒத்திராதே. அவர்களை நாம் ஒன்றும் சொல்லவுங்கூடாது; தெய்வம் உன்னதஸ்தானத்தில் எழுந்தருளப் பண்ணிவைக்கவேண்டும்; அப்படிச் செய்தாலும் அவர்கள் அடிக்கடி தங்களுக்குத் தோன்றியபடி கட்டளையிடுவதெல்லாங் கேட்டு அதன்படி நடவாமற் போனால் விரோதமுண்டாகின்றது. இப்படிப்பட்டவர்களோடு ஸஹவாஸம்பண்ணி ஒருவன் ஜெயிப்பனானால் அவன் தெய்வமென்றே நினைக்கவேண்டியது.

முக்கியமாய் யாவருக்கும் நினைப்பிலிருக்கவேண்டியது ஒன்று. முதல் முதல் சிநேகமுண்டாவதற்குக் காரணம் மிகவும் கண்டிதமாயிராமல் தாராளமாயிருப்பதே. இந்தப் பழையநேசர்கள் தாங்கள்தவிர மற்றெவரையும் நம்முடைய வீட்டுவழி நாடவொட்டுகிறதில்லை. இக்காலத்தில் நாம் பழகுகிற புதுநேசர்களோ அப்படியில்லை. எவர்வந்தாலும் எல்லாரிடத்திலும் நம்மைப்பார்க்கப் பத்துபங்கு அதிகமாய் நேசித்து ஆதரிக்கிறார்கள். காலம் மாறமாற மனிதர்களுடைய குணங்களும் மாறுகின்றன. இப்போதிய பழையநேசர்களே முன்பு ஒருகால் நல்லவர்களாயிருந்திருக்கலாம். நாம் முன் நம்முடைய பாலியதசையிலிருந்தபடியா இப்போது இருக்கிறோம்? எவ்வளவு வேறுபாடடைந்தோம். அது நமக்குப் பிரத்தியக்ஷமாய்த் தெரிகிறதல்லவா? அப்படியே அவர்களும் இப்போது மாறிப்போயிருப்பார்கள். ஆனால் நாம் நல்லவழியில் திரும்பினோம். அவர்கள் கெட்டவழியில் திரும்பினார்கள். இவைகளையெல்லாம் சொல்வதிற்பயனென்ன? போனது போனதுதான். இனிமேலாவது அவரவர்கள் தங்களுக்குள்ளேயே நன்றாய் ஆராய்ந்து பார்த்து நாகரீகமான வழியைக் கைக்கொள்ளக்கோருகிறோம்.

———

ஆகாரம் ஜீர்ணமாதல்.

நாம் சாப்பிடுகிற ஆகாரம் வயிற்றுக்குள் போய்ச் சேர்ந்த பிறகு ஜீர்ணமாகத்தொடங்குகிறது. ஜீர்ணமாவதென்னவென்றால், போஷிக்கத்தக்க ஸாரமானபாகத்தைத் திப்பியினின்று பிரித்து ஓர்வித நீர்போலாக்கி இரத்தமாக மாற்றுகிறதுதான். நாம் உட்கொள்ளுகிற ஆகாரமே நீர்த்தன்மையைப்பெறாமல் சரீரத்தைப் போஷிக்காதோவெனில், போஷிக்கமாட்டாது. ஏனெனில் அந்த ஆகாரம் முழுவதும் ஸாரமல்ல; அதிகபாகம் திப்பியும் மற்றப்பாகம் ஸாரமுமாயிருக்கிறது. வயிற்றுக்குள் போகும் சாதமும், கறிகாய் முதலிய பதார்த்தங்களும் மற்றப் பலகாரம்முதலான பண்டங்களும் இரத்தநரம்புகளின் வழியாய்ச் சென்று சரீரத்தைப் போஷிக்கமாட்டா; எவ்வளவு நன்றாய் மென்று மாபோலாக்கி விழுங்கினாலும், சரீரத்தில் ஓடும் இரத்தநாடிகளின் வழிகளை அடைத்துத் தீங்கு உண்டாக்குமேயொழிய சரீரத்துக்குப் போஷணையாகமாட்டா. ஆகையால் ஆகாரத்திலிருக்கும் உபயோகமில்லாத பாகம் குடல் வழியாய்ச் சரீரத்தினின்று வெளியே தள்ளப்படவேண்டியது; உபயோகமான பாகமோ அநேக மாறுபாடுகள் அடைந்து இன்னும் சில வஸ்துக்களோடு சேர்ந்து கடைசியில் இரத்தமாக மாறி உயிருக்கு ஆதாரமாகிறது.

சாதம் தீர்த்தம் கறிகாய் முதலியவைகளுக்குப் பிராணனில்லை, பிராணனில்லாத அந்த வஸ்துக்கள் நமது சரீரத்துக்குள் போனபிறகு எலும்புக்கும் தோலுக்கும் பலத்தைக் கொடுத்துப் பிராணனைக் காப்பாற்றுகின்றனவே, இதைவிட அதிசயமானவிஷயம் ஏதேனும் உண்டோ? நாம் சாப்பிடுகிற ஆகாரம் ஒரேவிதமானதல்ல; சோற்றை உண்கிறோம்; பாலைக்குடிக்கிறோம்; பழத்தைத் தின்கிறோம்; ஆகிலும் இந்த நானாவிதமான ஆகாரங்களும் உயிருக்கு ஆதாரமாய் இரத்தத்தைச் செய்வதாகிய ஒரேகாரியத்தைச் செய்கின்றனவே; இது எவ்வளவு அதிசயம்? அந்த பற்பலவிதமான ஆகாரங்களில், ஒன்று அதிக சாரமுள்ளதாயிருக்கும்; ஒன்று கொஞ்சசாரமுள்ளதாயிருக்கும். அப்படியிருந்தும் எல்லாம் ஒன்றைப்போலவே இரத்தவிர்த்திக்கு இடமாகின்றன. அந்த இரத்தம் எலும்புக்கு உறுதியும் தோலுக்குப் பலமும் புத்திக்கு ஸ்திரமும் கொடுக்கிறது.

நாம் உட்கொள்ளும் ஆகாரத்தை இரைப்பையானது மஞ்சள் நிறமுள்ள ஓர்வித மிருதுவான பாகுபோலாக்கி, அதன்பிறகு அதை ஜீர்ணமாக்க ஆரம்பிக்கிறது. அந்தப் பாகை அன்னப்பாகு என்ன

லாம். இரைப்பை இரண்டுவழிகளுள்ளதாய் ஒருபெரிய தோல்பை யைப்போலிருக்கிறது. ஒருவழியால் ஆகாரம் அன்னக்குழலாகிய (அ) கண்டநாளத்தால் சென்று உள்ளே இறங்குகிறது; மற்றொரு வழியால் (த) அன்னப்பாகு குடலில்போய் விழுகிறது. ஒரு மனி தனுடைய இரைப்பை ஏறக்குறைய ஒன்றரைச்சேர் பிடிக்கும்.



ஆகாரம் பூரணமாய்க்கொண்ட இரைப்பை.

உணவு இரைப்பையிலே போய் விழுந்தவுடனே, நாவில் உமிழ் நீர் சுரக்கிறதுபோல, தோலின்கீழிருக்கும் ஒருவகைக் கிராந்திகளி னின்றும் ஓர்வித திரவவஸ்து உண்டாகிறது; அது ஜீர்ணநீர் எனப் படும். ஆகிலும் இந்த ஜீர்ணநீரின் தன்மை உமிழ்நீரினுடையதுபோ லல்ல. உட்செல்லும் உணவை அன்னப்பாகு ஆக மாற்றுவது இந்த நீரின் காரியந்தான். எவ்விதமான ஆகாரமானாலுஞ்சரி, எந்தநிறமான ஆகாரமானாலுஞ்சரி எல்லாவற்றையும் அந்த ஜீர்ணநீர் சாம்பல்நிற மான ஒரேவர்ணமுள்ள அன்னப்பாகாக ஆக்கிவிடுகிறது. எந்தப் பதார்த்தத்தைப் பாகாகமாற்ற ஜீர்ணநீரால் ஆகாமற்போகிறதோ அது இரத்தபுஷ்டிக்கு அடுத்ததல்ல; ஆகையால் அது ஏற்ற உண வல்ல. நமது இரைப்பையை கல்லையும் மண்ணையும் போட்டு நிறைத்தால் அது பாகாக மாறமாட்டாதாதலால் போஷணைகொ டுக்கமாட்டாது. அப்படியே புல்பூண்டுகள் நமக்கு ஒத்துக்கொள் ளாத உணவுகள். ஆடுமாடுகள் சோறுமுதலிய மனிதனுக்குரிய ஆகாரங்களைத் தின்னுமாயின், அவைகளுடைய இரைப்பைகளு க்கு அப்படிப்பட்ட ஆகாரங்களை ஜீர்ணமாக்குந்தன்மையில்லாமை யால் போஷணையை அடையமாட்டா.

இதனால் என்ன ஏற்படுகிறதென்றால், நாம் எவ்வளவு சாப் பிடுகிறோமோ அவ்வளவும் நம்மைப் போஷிக்கிறதில்லை; எவ்வ ளவு ஜீர்ணமாகிறதோ அவ்வளவுக்குமாத்திரந்தான் போஷணைகொ டுக்கும் சக்தியுண்டு. இரத்தபுஷ்டிக்கு அடுத்ததாயும் எளிதாயும் (உபத்திரவமில்லாமலும்) சீக்கிரமாய் ஜீர்ணமாகத்தக்கினதாயும் இருக்கிற ஆகாரம் உடம்புக்கு ஏற்றது; இரைப்பையில் சேர்ந்து

சுலபமாய் அன்னப்பாகாகக் கரையாமல் உபத்திரவம்பண்ணும் ஆகாரமும் போஷணசக்தி குறைவாயிருக்கும் ஆகாரமும் உடம்புக்கு ஆகவே ஆகாது.

சிலர் மூடத்தனமாய் ஜீர்ணமாகாத வஸ்துக்களை விழுங்கி வித்தைபண்ணுகிறார்கள். எப்படியெனில், ஏதோ ஒரு பந்தயத்தை ஜயிப்பதற்காகச் சிலர் கத்திகளையும் கற்களையும் விழுங்குகிறார்கள். ஒரு பெண் நிலக்கரியைக் கட்டிகட்டியாகத் தின்றுகொண்டிருந்தாளாம். இன்னொருபெண் ஊசிகளையும் சிற்றாணிகளையும் விழுங்குவளாம். அநேக மடப்பிள்ளைகள் தங்களுடைய கூட்டாளிகள் அதிசயப்படும்படியாக கண்டதையெல்லாம் தின்று வாயை மென்று பல்லைக் கடிக்கிறார்கள். இதெல்லாம் இரைப்பைக்கு மிகுந்த வருத்தமுண்டாக்குமேதவிர, சிறிதும் அதைப் போஷிக்கமாட்டாது.

இம்மாதிரி அக்கிரமமான காரியங்கள் செய்துவந்தால் இரைப்பை நெடுநாளைக்குச் செம்மையாயிராது. ஜரிக்கமாட்டாத பதார்த்தங்களில் எதைப் புசித்தாலும் அது இரைப்பையைச் சேதப்படுத்தி அதன் சக்தியைக் குறைத்துவிடும். அடிக்கடி அம்மாதிரியான காரியம் செய்துவந்தால் இரைப்பை உபயோகமற்று ஆரோக்கியமான போஜனங்களைக்கூட ஜரிப்பித்துக்கொள்ளமாட்டாமற்போகும். அப்புறம் ஒருநாளும் தேகசௌக்கியமும் நல்வாழ்வும் கிடைக்கமாட்டாது.

ஒரு ஆகாரம் ஒருவனுக்கு ஆரோக்கியமாயிருக்கும்; ஒருவனுக்கு இராது. இத்தேசத்தில் அநேகருக்கு சோறு கறிகாய் பழம் பால் கோதுமைப்பண்டங்கள் இவ்விதமான ஆகாரங்கள் சௌக்கியமாய் ஜீர்ணமாகின்றன; ஆதலால் இவைகளே இத்தேசத்தாருக்குத்தக்க உணவு. அபக்குவமான கறிகள், பழுக்காத கனிகள், பால் சர்க்கரை நெய் கோதுமை முதலியவைகளால் செய்த மந்தமான பண்டங்கள் இவைகளைப் புசிப்பதனாலும், வெறியுண்டாக்கத்தக்க பானங்களைக் குடிப்பதனாலும் சங்கடப்படாதவர்கள் யார்? ஆதலால் நம்முடைய தேகத்துக்கு ஒத்த உணவுகளையே முக்கியமான ஆகாரமாக வைத்துக்கொண்டு மேற்சொன்ன ஒவ்வாத உணவுகளை எப்போதாவது ஒருகால் புசிக்கும்படி நேரிட்டால் மிதமாய்க் கொள்ளவேண்டும்.

இரைப்பையைச் செம்மையாய்க் காப்பாற்றினால் அது கிரமமாய்த் தன் வேலையைச் செய்யும். அது நாம் உட்கொள்ளும் உணவு ஜீர்ணமாவதற்கு எவ்வளவு ஜீர்ணநீர்வேண்டுமோ அவ்வளவையும் உண்டாக்கும். நாம் புசிக்கும் ஆகாரம் கொஞ்சமாயிருந்தால் ஜீர்ணநீர் கொஞ்சமாயுண்டாம். புஷ்டான்னம் புசித்தால் அதிகமாயுண்டாகும். இப்படியே நாம் உண்ணுகிற உணவுக்குத் தக்கபடி ஜீர்ணநீரையுண்டாக்கி அதை ஜரிப்பிப்பதே இரைப்பையின் காரியம்.

அப்படியன்றி நம்முடைய சௌக்கியத்துக்குவேண்டிய அளவுக்கு மிஞ்சியும், பசிதீர்த்துக்கொள்ள எவ்வளவுவேண்டுமோ அதற்கு அதிகமாயும் ஆகாரத்தைத் தின்று இரைப்பை தாங்க மாட்டாமல் போட்டடைத்தால் அது ஜரிக்கத்தக்க ஜீர்ணநீரை உண்டாக்கமாட்டாது; அதனால் அப்படி மிகுந்த சோறு ஜீர்ணமாகிறதேயில்லை. அப்புறம் அது புளியேப்பம்போன்ற ஒருவித வெடிப்புக்காற்றாக மாறி அஜீரணமென்கிற வியாதியை உண்டாக்குகின்றது.

வேண்டுமளவு புசித்தபின்பு இனி ஆகாரம் வேண்டியதில்லையென்பதற்கு அடையாளம் உண்டாகின்றதே, அது மிக்க நலமானது. அப்படியில்லாவிட்டால் உண்ணச்சோறு சமர்த்தியாய் உள்ளவர்கள் இரைப்பையின் சக்தி அழிந்துபோமளவும் தின்றுகொண்டிருப்பார்களே! மேலும் பண்டங்களை நன்றாய் மெல்லாமல் கட்டிகட்டியாய் விழுங்கிவிட்டால் இரைப்பைக்கு வேலை இரட்டித்து அதன் வலிவு குறைந்துபோம். ஏனெனில் அது சோற்றை ஜரிப்பிப்பதுமல்லாமல் அதற்கு முன்னமே அதைக் கரைக்கவேண்டுமல்லவா? ஆதலால் நாம் அப்படிச் செய்வதனால் ஆகாரம் ஜீர்ணமாவதற்கு அதிககாலம் பிடிக்கிறதுமன்றியில் அது வருத்தமாயுமிருக்கும்.

வீண்பெருமையையும் திருப்தியையும் பற்றிய கதை.

(தொடர்ச்சி.)

இப்படியிருக்குங்காலத்தில் அரசனுடைய பொன்நகைப் பெட்டிகளில் நாற்பது பெட்டிகள் காணாமற்போயின. பொக்கிஷன்முதலான பெரிய உத்தியோகஸ்தர்களெல்லாரும் திருடர்களைக் கண்டுபிடிக்கத் தங்களால் ஆனமட்டும் முயன்றார்கள். அரசன் ராஜஜோதிஷனையும் பிரதான மந்திரிகளையும் வரவழைத்து, இன்னும் பத்துநாளில் திருடர்களைக் கண்டுபிடிக்காவிட்டால் உங்களைச் சிரசாக்கினைசெய்துவிடுவேன் என்றான். ஒன்பதுநாள் கழிந்துவிட்டது; திருட்டுச்சங்கதி வெளிப்படுவதாகக் காணவில்லை. அப்படி எல்லாரும் பயந்து திகைத்துநிற்கும்போது, அவர்களிலொருவன் தையற்கார ஜோதிஷனை வரவழைத்தால் காரியம் அநுகூலமாகுமென்று எடுத்துச்சொல்ல, சரிதானென்று இரண்டு ஆட்களை ஆமட் வீட்டுக்குத் துரத்தி அவனை இட்டுக்கொண்டுவரும்படி கட்டளையிட்டார்கள். அந்த ஆட்கள் அவனிடத்தில்போய் நடந்த செய்தியைச் சொன்னபோது, அவன் பெண்சாதியைப் பார்த்து: உன்னுடைய பேராசையின் முடிவைப் பார்த்தாயா? நான் இப்போது கொல்லப்படப்போகிறேன்; ராஜஜோதிஷன் என்னுடைய அகங்காரத்தைக் கேள்விப்பட்டு வேஷக்காரனென்றுசொல்லி என்னைச் சிரசாக்கினை பண்ணுவிக்கப்போகிறான் என்று அழுதுவிட்டு ஆட்களோடே கூடப்போனான். அரண்மனைவாசலிற் போகும்போது ராஜஜோதிஷன் ஓடிவந்து அவனைக் கைபிடித்து அழைத்துக்கொண்டுபோய் மரியாதைபண்ணி உட்காரவைத்து, சகலமுந்தெரிந்த ஜோதிஷரே! தெய்வத்தின் மாயை எவ்விதமாயிருக்கிறது பாரும்; மேலானவர்கள் ஒரு நொடியில் ஒன்றுமில்லாமற்போகிறார்கள்; அற்பர்கள் நிமிஷத்தில் உயர்ந்துபோகிறார்கள்; எல்லாவற்றிற்கும் அதிர்ஷ்டந்தான் காரணம்; விதிகாரணத்தால் எனக்கு இப்போது

சனிபிடித்திருக்கிறது; அதிர்ஷ்டவசத்தால் உங்களுக்கு மேன்மைவரப்போகிறதென்றான்.

அப்போது அரசனிடத்திலிருந்து ஒரு தூதன் அவ்விடம்வந்து எஜமானரவர்கள் புதுஜோதிஷனுடைய வல்லமையைக் கேள்விப்பட்டு அவரை உடனே அழைத்துக்கொண்டு வரச்சொன்னார்களென்று சொல்ல, ஆமட் என்பவன் ராஜஜோதிஷன் முதலானவர்களிடத்திலிருந்து செலவுபெற்று, இந்தச்சமயத்தில் கடவுள்தான் காப்பாற்றவேண்டுமென்று சுவாமியைத் தியானித்துக்கொண்டே அந்தத் தூதனோடு போய் அரசன் முன்னிலையில் வந்து வணக்கமாய் நின்று சலாஞ்செய்தான். அரசன் அவனைப்பார்த்து: என் சொத்தைத் திருடினது யார் சொல்லும் என்று கேட்க, சற்று நிதானித்து, மகாப்பிரபு! திருடினது ஒருவனல்ல; நாற்பதுபேர்கூடித் திருடியிருக்கிறார்கள் என்றான். அதற்கு அரசன்: சரிதான், நல்லது அவர்கள் யார்? அந்தச் சொத்தை என்னசெய்தார்கள் என்ன, ஜோதிஷன்: ஐயா! அந்தக் கேள்விகளுக்கு விடை இப்போது சொல்ல என்னாலாகாது; ஜோதிஷக்கணக்குகள் பார்க்க நாற்பதுநாள் கெடுவு தயவுசெய்தால் அப்புறம் தாங்கள்கேட்கிறதற்கெல்லாம் பதில்சொல்லமாட்டேன் என்றதின்பேரில், அரசன்: அப்படியே ஆகட்டும், அப்புறம் என் சொத்து அகப்படாவிட்டால் உம்மைத் தூக்கில் போடுவிப்பேன் என்று சொன்னான். ஆமட் என்பவன் அந்தமட்டும் தப்பினோமென்று சந்தோஷப்பட்டு நாற்பதுநாளைக்குள் ஊரைவிட்டு ஓடிப்போகிறதென்ற தீர்மானத்துடனே வீட்டுக்கு வரும்போது, அவன் பெண்சாதி என்னசமாசாரமென்று கேட்க, அவன்: என்னசமாசாரம் இருக்கிறது; அரசனுடைய பொக்கிஷத்திலிருந்து கெட்டுப்போன நாற்பது பெட்டி நகைகளை நாற்பதுநாளில் கண்டுபிடித்துச் சொல்லாவிட்டால் நான் உயிரை இழந்துபோவேன்; இதுதான் சமாசாரம் என்றான். அதற்கு அவள்: ஏன் அஞ்சிக்கைப்படவேண்டும்? மாணிக்கத்தையும் கழுத்துமாலையையும் கண்டுபிடித்துச் சொன்னதுபோல இந்தத் திருடனையும் கண்டுபிடித்துச் சொல்வதற்கு என்னவென்று கேட்க, தையற்காரன்: என்ன மூடப்பேச்சுபேசுகிறாய்; உன்னைச் சந்தோஷப்படுத்துவதற்காக ஜோதிஷனென்று வேஷம்பூண்டேனேதவிர, எனக்கு அந்தச் சாஸ்திரத்தில் ஞானமும் சக்தியும் கிடையாதென்று உனக்குத் தெரிந்திருந்தும் இந்தப் பேச்சு பேசுகிறையே; ஏதோ தெய்வகடாக்ஷத்தால் அந்த இரண்டிலும் தப்பித்துக்கொண்டேன்; இப்போது அப்படி தப்பித்துக்கொள்ள யாதொரு வழியையுங்காணோம்: ஆகினும் நாற்பதுநாள் கெடுவுவாங்கியிருக்கிறேனே, அதற்குள் நாம் இப்போது கிடைத்திருக்கிற பணத்தை எடுத்துக்கொண்டு அன்னியதேசம் போய்விடுவோம்; அங்கே முன்போலவே தையல்வேலைசெய்து பிழைக்கலாமென்றான். அந்தச் சுந்தரி அவன் சொன்னதைக்கேட்டு மகா உக்கிரமான கோபமடைந்து, அற்பனுக்கு அற்பபுத்தி போகாது என்று சொல்வது சரியாகவேயிருக்கிறது; தையல்வேலைசெய்து அதனால் வரும் பணத்தினால் நான் எக்காலத்துக்கு ராஜஜோதிஷனுடைய பெண்சாதியைப்போலாவேன்? மனோதைரியத்தோடு நின்று களவைக் கண்டுபிடிக்கத்தக்க எத்தனப்படுவதை விட்டுவிட்டு, பைத்தியக்கார எண்ணம்கொள்வது ஆண்மைத்தனமா? இந்த விஷயத்திலும் கடவுள் சகாயம்பண்ணுவார். எப்படியானாலுஞ்சரி, நீர் இந்த ஊரைவிட்டுப் போகக்கூடாது; நீர் போகக்கருதினாலும் நான் அதை அரசனுடைய வேலைக்காரர்களுக்குத் தெரிவித்துப்போடுவேன்; நான் சொன்னது சொன்னதுதான்; என் பேச்சின் வலிமை ஒன்றுக்குங்கிடையாது. வீணாகச் சஞ்சலப்படாதேயும்; எந்தக்காரியமும் பிடிமானமாய்ப் பிடித்தால் கைகூடும். ‘திரைகடலோடியுந் திரவியந்தேடு’ என்று சொல்லியிருக்கிறது தெரியாதா? எப்பாடுபட்டாவது திரவியம் சம்பாதித்துக்கொடுத்து என்னுடைய அழகுக்குத்தகுந்த அந்தஸ்தில் நீர் என்னை வைக்கவேண்டும் என்றாள். தன் பெண்சாதி பிடித்தது பிடிவாதமென்று தெரிந்து ஆமட் என்பவன், நல்லது, உன் இஷ்டப்படியே ஆகட்டும்; இந்த நாற்பதுநாளையும் செவ்வையாய்ப்போக்க மனதிருக்கிறது; எனக்குக் கணக்குவழக்குத் தெரியாதென்று நீ அறிவையே; ஆகையால் இதோ இருக்கிற நாற்பது தேங்காய்களையும் வைத்துக்கொண்டு மறந்துபோகாமல் தினந்தோறும் இரவில் நான்

ஜபம்செய்தான்பிறகு ஒவ்வொன்ருகக் கொடுத்துவா; தேங்காய் என்னிடத்தில் எத்தனை சேருகிறதோ அதை எண்ணி அத்தனைநாளாய்விட்டதென்று கண்டுகொள்வேன் என, அவளும் தன்னெண்ணம் நிறைவேறிற்றென்று சந்தோஷப்பட்டு, தேங்காய் நாற்பதையும் எடுத்து வைத்துக்கொண்டு அவனிஷ்டப்படியே செய்கிறதாக வாக்குக்கொடுத்தாள்.

இதற்குள்ளே அரசனுடைய சொத்தைத் திருடிவைத்துவிட்ட திருடர்கள் ஊரைவிட்டுப் போய்விட்டால் தங்கள்மேல் சந்தேகந்தோன்றுமென்று நினைத்து, ஊரிலேயே இருந்துகொண்டு தங்களைக் கண்டுபிடிப்பதற்காக என்னென்ன காரியம் நடக்கிறதென்று ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆமட் என்பவன் ராஜசமூகத்தில் நின்று விக்கியாபனம்பண்ணும்போது அந்தத் திருடர்களில் ஒருவனிருந்தான்; நாற்பதுபேர் திருடரென்று ஜோதிஷன் சொன்னதனாலே தன்னுடைய கூட்டத்தாரின் „தொகையைச் சரியாகச் சொல்லிப்போட்டானென்று பயந்து • உடனே தோழர்களிடத்திற்சென்று நாமெல்லோரும் அகப்பட்டுக்கொண்டோம்; புதுஜோதிஷனுகிய ஆமட் என்பவன் திருடர் நாற்பதுபேரென்று ராஜாவினிடத்தில் சொல்லிப்போட்டான் என்ருன். அதைக்கேட்டுத் திருடர்களுக்கு எஜமானுயிருந்தவன் அதைச் சொல்லிவிட்டதனுலேயே ஜோதிஷனென்று நம்பலாமா? நாற்பதுபெட்டி களவுபோயிருக்கிறபடியால் திருடரும் நாற்பதுபேரென்று ஊகித்துச்சொன்னுன்; அது தற்செயலாய் சரியாக விழுந்தது; அவ்வளவுமாத்திரமேயன்றி, அவனுடைய கெட்டிக்காரத்தனமல்ல; ஆகிலும் அவன் இரண்டுமூன்று தடவை கெட்டிக்காரனென்று பேரெடுத்திருக்கிருன்; ஆதலால் அவன் செய்கிறதைக் கவனிப்பது நல்லது. அவனுடைய பெண்சாதியிடத்தில் அவனுக்கு மிகவும் ஆசையுண்டாம்; ஏதாவது விசேஷமிருந்தால் அவளோடு சொல்லாதிருப்பானு? இன்றிரவு அவன் பெண்சாதியோடு சம்பாஷிக்கும்போது என்னசொல்லுகிருனென்று நம்மில் யாராவது ஒருவன் அவனுடைய வீட்டுக்கூரையின்கீழ் நின்று கேட்டுவரவேண்டுமென்ருன். அது நல்ல யுக்தியென்று எல்லாரும் அங்கீகரித்து, இராத்திரி இருட்டினபிறகு தங்களில் ஒருவனை அனுப்பினர்கள். அவன், தையற்காரன் ஜபமுடித்து அவனுடைய மனைவி முதல்தேங்காயைக் கொடுக்கப்போகிறசமயத்தில் அங்கே வந்துசேர்ந்தான். ஜோதிஷன் தேங்காயை வாங்கிக்கொண்டு இன்றைக்கு இதோ நாற்பதில் ஒன்றிருக்கிறது என்ருன். அதைக் கேட்டுக்கொண்டிருந்த திருடன் வயிற்றில் நெருப்பைவாரிக் கட்டிக்கொண்டு தோழர்களிடஞ்சென்று, நான் போனவுடன் ஞானதிர்ஷ்டியினுல் அறிந்து நாற்பதில் ஒன்றிருக்கிறதென்று ஜோதிஷன் மனைவியோடு சொன்னுனென்ருன். அதை அவர்கள் நம்பவில்லை; பயத்தினுலே அப்படி அவனுக்குத் தோன்றியிருக்குமென்று சிலர் நினைத்தார்கள். மறுநாள் ராத்திரி அதேவேளைக்கு இரண்டுபேர் போகிறதென்று தீர்மானித்து, அன்றைக்கும் அவர்கள் ஜோதிஷன் தன் மனைவி தேங்காயைக்கொடுக்க, இன்றைக்கு இதோ இரண்டிருக்கிறதென்று சொல்லும் சமயத்தில் அவ்விடம் வந்து சேர்ந்தார்கள். வந்த இருவரும் தங்களைத்தான் ஜோதிஷன் சொன்னுனென்று நம்பிக்கைபிறந்து அப்படியே மற்றத்திருடர்களோடு சொன்னுர்கள். மறுநாள் மூன்றுபேரை அனுப்பினுர்கள். அன்றைக்கும் அப்படியே நடக்கவே, நாலாம் நாள் நாலுபேர் வந்தார்கள். இப்படியே ஒவ்வொருநாளும் ஒவ்வொருவர் அதிகமாய் வந்துகொண்டிருந்தார்கள். வந்தவர்களுக்கெல்லாம் பூரணநம்பிக்கை உண்டாய்விட்டது. கடைசிநாள் நாற்பதுபேரும் போனுர்கள்; ஆமட் என்பவன் இன்றையோடு எல்லாம் ஆய்விட்டது; இன்றைக்கு நாற்பதும் இதோ இருக்கிறதென்று உரக்கக்கூப்பிட்டான்.

அந்த வார்த்தைகளைக் கேட்கவே திருடர்களுக்குச் சகல சந்தேகமும் நீங்கிப் போயிற்று. ஒருநாள்கூட தப்பாமல் அவர்களுடைய தொகையை என்னமாய்க் கண்டுபிடித்துச்சொன்னுன்? தெய்வீகஞானமில்லாவிட்டால் அது யாராலேதான் மாளும்? அப்படிப்பட்ட தெய்வகடாக்ஷம் பெற்றிருந்த மனுஷனை ஏமாற்ற எண்ணுவது இனி ரசமற்ற காரியம்; திருட்டுச்சொத்தில் அவனுக்குக் கொஞ்சம்

கொடுத்து அவனை வசம்பண்ணுகிறதே நல்ல உபாயமென்று எஜமானன் மற்றவர்களுக்குப் புத்திசொன்னான். அவர்களும் அதுவே சரியென்று ஒத்துக்கொண்டு, எல்லாரும் கும்பலாய்க்கூடி விடிய இரண்டுநாழிகைக்கு முன்னதாக ஜோதிஷன் வீட்டுக்கதவை தபதபவென்று தட்டினார்கள். அவன் அரசனுடைய சேவகர்கள் தன்னை இழுத்துக்கொண்டுபோக வந்துவிட்டார்களென்று அலறி எழுந்து, திடுக்கிட்டுக் கைகால் நடுங்கி, என்னசெய்யப்போகிறோமென்று பயந்து கதவைத் திறந்து நிதானியுங்கள்; நீங்கள் வந்திருக்கிற காரியம் எனக்குத்தெரியும் என்றான். கதவைத் திறந்தவுடனே திருடர்களுக்கு எஜமானன் தெய்வத்துக்கு ஒப்பானவரே! உமக்குத் தெரியாதகாரியமும் உண்டோ? நாங்கள் செய்தகாரியத்தை சரியென்று ஸ்தாபிக்கிறதற்காக வரவில்லை; உமக்கு இரண்டாயிரம்வராகன் கொடுக்கிறோம்; எங்களுடைய கொடியகாரியத்தை வெளியிடாதிருமென்று காலைப்பிடித்துக்கொண்டார்கள். ஆமட் என்பவன் கண்ணை நிமிண்டிக்கொண்டு, மெய்தானோ அல்லது கனவோவென்று சற்று நிதானித்து, வந்திருக்கிறவர்கள் திருடர்களென்று திடம்பண்ணிக்கொண்டு, என்னசொன்னாய் அடா திருடா! உன்னுடைய தீச்செயலை உலகத்துக்குத் தெரிவிக்காமலிருப்பேனோவென, திருடர்களெல்லாரும் ஐயா! எங்களிடத்தில் இரக்கம்வையுங்கள்; அரசனுடைய சொத்தையெல்லாம் திருப்பிக் கொடுத்துவிடுகிறோம்; எங்களுடைய பிராணனைமாத்திரம் காப்பாற்றவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். ஜோதிஷன் அந்த வேண்டுகோளுக்கு இணங்கி, குற்றவாளிகளே! சூரியசந்திர நட்சத்திரங்களின்மேலும் செல்லுகிற என்னுடைய ஞானதிருஷ்டிக்கு அகப்படாமல் தப்பித்துக்கொள்ள முயன்றீர்களல்லவா? ஆகிலும் அபாயம் வருவதற்குமுன்னமே நீங்கள் வந்து வணங்கினீர்களாகையால் பிழைத்தீர்கள். திருடிக்கொண்டுபோன சொத்து முழுமையும் திருப்பிக்கொடுத்துவிடவேண்டும். சரசரவென்று இப்போதே புறப்பட்டுப் பெட்டிகளை முன்னே எப்படியிருந்தனவோ அப்படியே எடுத்துக்கொண்டுபோய் அரசனுடைய மாளிகை தென்பக்கத்துச் சுவரின்கீழ் ஒரு அடி ஆழத்தில் புதைத்துவிடுங்கள்; கொஞ்சமுந் தவறாமல் இப்படியே செய்வீர்களாயின் உங்களுக்கு யாதொரு அபாயமும் வராமல் காக்கிறேன்; இல்லையாயின் உங்களுக்கும் உங்கள் இனத்தாருக்கும் நாசம்வந்துவிட்டதென்றே நினையுங்கள் என்றான். திருடர்களும் அவன் கட்டளைப்படி செய்கிறதாக ஒத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

அவர்கள் போனபிறகு ஆமட் என்பவன் முழங்காற்படியிட்டு, அவ்வளவு கிருபைசெய்தருளின சுவாமியைத் தியானித்தான். இரண்டுநாழிகைக்குப்பிறகு அரசனுடைய தூதர்கள் வந்து அவனை அழைத்தார்கள்; அவன் தன் பெண்சாதியண்டைக்குப்போய் திருடர்கள் வந்துபோன செய்தி ஒன்றும் சொல்லாமல் நான் அரசனிடத்திற்குப் போகிறேனென, அவள்: சுவாமி எப்படியாவது தப்ப வழிகாட்டுவார் என்று புருஷனுக்குத் தைரியஞ்சொல்லி அனுப்பினாள். மேலுக்கு அப்படி வேஷம் போட்டபோதிலும், புருஷன் இறந்துபோகிறபட்சத்தில் தான் இன்னும் யாரையாவது பணக்காரனைக் கலியாணம் செய்துகொண்டு சுகமாய் வாழலாமென்பது அவளுடைய உட்கருத்து. சுவாமிக்கு எல்லாருடைய இருதயமும் தெரியுமாதலால் நல்லதோ பொல்லாததோ அவரவர்க்குத் தகுந்தபடி நடத்துவார்.

ஆமட் என்னும் ஜோதிஷன் அரசன்முன்னே போய்நிற்க, அவனுடைய வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்த அரசன்: ஜோதிஷரே, சொத்தைக் கண்டுபிடித்தீரா? முகத்தின் களையைப்பார்த்தால் ஜயமிருக்கிறதென்று காண்கிறது என, ஜோதிஷன்: பிரபுக்களுக்கு சொத்துவேண்டுமா? திருடர்வேண்டுமா? என்னுடைய ஜோதிஷக் கணக்கின்படி ஒன்றுதான் கிடைக்கும்; தங்களுக்கு எது இஷ்டமோ தெரிவிக்கவேண்டுமென்றான். அதற்கு அரசன்: திருடர்களைத் தண்டிக்கவேண்டுவது அவசியமானாலும், ஏதாவது ஒன்றுமாத்திரம் கிடைக்குமென்கிறபடியால், சொத்தைத்தான் கண்டுபிடித்துக்கொடும் என்று கேட்க, ஆமட் என்பவன்: திருடர்களை மன்னிக்கிறதாக அரசனிடத்திலிருந்து வாக்குவாங்கிக்கொண்டு என்னுடன் கூடவந்தால் சொத்தைக் காண்பிக்கிறேனென்றான். அந்த ஆச்சரியத்தைப் பரிசோதிக்கும்படி

யாக அரசனும் பிரதான உத்தியோகஸ்தர்களும் அவனுடன்கூடச் சென்றார்கள். அரண்மனைக்குத் தென்னண்டை மதிலருகேபோய் ஆகாயத்தைப்பார்த்து மந்திரம் உச்சரிக்கிறாரென்று பக்கத்திலுள்ளோர் பிரமிக்கும்படி அவன் சுவாமியைத் தியானித்து, இந்த மதிற்பக்கத்தில் வெட்ட உத்தரவுகொடுக்கவேணுமென்று அரசனைக் கேட்டான்; அங்கே அப்படியே வெட்டிப்பார்த்தபோது நாற்பது பெட்டிநகைகளும் முத்திரைபோட்டது போட்டபடியே அகப்பட்டுப்போயின. அரசனுக்கு வந்த ஆனந்தம் இவ்வளவு அவ்வளவு அல்ல; அரசன் உடனே அந்த ஜோதிஷனைக் கட்டி அணைத்துக்கொண்டு, ராஜஜோதிஷனாக நியமித்து, அரண்மனையில் அவனுக்கென்று ஓரிடம் நிர்மித்து, தனக்கிருந்த ஒரேபெண்ணையும் அவனுக்குக் கலியாணம் செய்துவைக்கவேண்டுமென்று தீர்மானித்தான். ஆமட் என்பவனுடைய ஞானத்தையும் யோக்கியதையையும் நன்னடக்கையையும் மெச்சி அரசனுடைய பெண்ணும் அவனைப் புருஷனாக மணம்புரியச் சம்மதித்தாள்; கலியாணமும் நடந்துபோயிற்று. செல்வம் 'சகடக்கால்போலவரும்' என்பதற்கு இதோர் நல்ல உதாரணம். காலையில் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போது பிராணன்போகிறது நிச்சயமென்று நிராசையோடு எழுந்திருந்த ஆமட் என்பவன், சாயங்காலத்துக்குள் அரசனுடைய பெண்ணின் புருஷனாகி அரண்மனைக்கு அதிபதியாகிவிட்டான். ஆகிலும் இப்படி நேர்ந்த மாறுபாட்டினாலே அவனுடைய குணாதிசயங்கள் மாறவில்லை. ஏழையாயிருக்கும்போது எப்படி சாந்தமாயும் தாழ்மையாயும் இருந்தானோ அப்படியே உன்னதபதவி அடைந்தபிறகும் இருந்தான். நற்குணங்கள் அமைந்த அந்தப் புதுமனைவியோடு பழகப்பழக, அவளுடைய குணாதிசயமும் பொருமையும் துரோகசிந்தையுமுள்ள முன்மனைவியுடைய குணாதிசயமும் எவ்வளவு வித்தியாசமாயிருக்கிறதென்று அவன் கண்டுகொண்டான்.

(இன்னும் வரும்.)

லார்ட் எர்ஸ்கின் விருத்தாந்தம்.

ஸ்காத்லாந்து என்னும் தேசத்து ராஜதானியான எடின்பரோ என்னும் பட்டணத்தில் எர்ஸ்கின் என்று ஒருவரிருந்தார். புத்தி, வீரம், தைரியம், துணிச்சல்முதலியவைகளில் அவர்க்குச் சரியானவர் இல்லவேயில்லையென்று சொல்லும்படியிருந்தார். அவர் இங்கிலாந்து ஆலோசனைச்சபையில் ஒரு நியாயாதிகாரியாகி ஆனரபில் என்னும் பட்டமும் பெற்றார். ஆனால் பாலியத்தில் அவரைப் பார்த்திருந்தவர்கள் அவர் இப்படிப்பட்ட உயர்ந்தபதவிக்கு வருவரென்று ஒருபோதும் நினைத்திருக்கமாட்டார்கள்; ஏனென்றால் பாலியத்தில் அவரைச் செம்மையாய்ப் படிப்பிப்போருமில்லை, தானாய் ஒரு வேலையில் புகுந்து பயிலுவதற்கும் பிதிரார்ஜிதம் அதிகமாயில்லாமல் போய்விட்டது. அவருடைய பாலியசரித்திரங்களைக்கேட்டால் வெகு விநோதமாயிருக்கும். அவர் 1750-௵ ஜனுவரி௴ 10௳ பிறந்தார். அவருடைய தாய் தந்தைமுதலானவர்களெல்லாம் போன 18-வது நூற்றாண்டின் மத்தியில் மிண்ட்க்லோஸ் என்னுமிடத்தில் ஒரு பெரிய வீதியில் வாஸம்பண்ணிக்கொண்டிருந்தார்கள். அவ்விடத்தின் வரலாறு என்னவென்னில், அந்த வீதியில் உள்ள வீடுகளெல்லாம் ஒன்றின்

மேலொன்றாய் ஏழுஎட்டு அடுக்குவரையில் கட்டியிருக்கும். அவ்வீடுகளின் அடித்தளத்தில் கடைகாட்சிமுதலியவைகளும், அதன்மேல் இரண்டுமூன்று அடுக்குவரையில் பெரிய உத்தியோகஸ்தர்களும், பெரிய மனிதர்களும், அதன்மேல் ஏற ஏற ஏழை ஜனங்களுமாய் வாஸம்பண்ணுவார்கள். இப்படி வஸிக்கக் காரணமென்னவென்றால், அடிப்புறங்களில் குடிக்கூலி விசேஷமாயும், மேலே போகப்போக ஸ்வல்பமாயுமிருந்தன. பகன்தேசஸ்தான 5-வது ஏரல் பட்டம்பெற்ற ஹென்றி டேவிட் என்பவர் அந்த வீடுகளிலொன்றில் எல்லாவற்றிற்கும் உயர்ந்ததலத்தில் வாஸம்பண்ணிக்கொண்டிருந்தார். அவருடைய அந்தஸ்துக்கேற்றபடி பார்த்தால் அவர் இரண்டாவது மூன்றாவது பாகங்களில் வஸிக்கத்தக்கவர்; ஆனால் அவருடைய ஸங்கடமானது அவரை அப்படியாகச் செய்தது. அவருடைய வருஷாந்தத்து வரும்படியெல்லாம் 2,000 ரூபாய்தான். அதனால் குடிக்கூலி எளிதாயிருக்குமென்றே அவ்விடத்தில் மிகவும் நெருக்கமாய் இரண்டு அறை வாங்கிக்கொண்டிருந்தார். ஆயினும் அங்கே அவர் இடம்போதாமல் சங்கடப்படவில்லை. இடம் சூக்ஷ்மமாயிருந்தபோதிலும், அதில் மேலே உட்காரவும் படுக்கவும் அநுகூலமாயும், கீழே உடுப்புகள் புஸ்தகங்கள்முதலிய சாமான் வைத்துக்கொள்ளும்படியாயும், இழுப்புமேஜைகளும் இன்னும் இம்மாதிரி ஒரேவிடத்தில் அநேககாரியங்கள் செய்யும்படி யாவையும் அமைத்துக்கொண்டு கூடியவரையில் சுகமாயே இருந்தார். அவருடைய சொந்தக் கிராமத்தில் ஒரு வீடு அவருக்குக் கிடைத்திருந்தபோதிலும், அது சிதிலமாய்ப்போனதால் அதைச் செப்பனிடச் சக்தியில்லாமல் இங்கே வரும்படி நேரிட்டது. அவருடைய வரும்படி ஸ்வல்பமாயிருந்ததற்கு அவர் மனையாட்டி நல்லவளாயிருந்ததனால் ஏதோ ஒருவழியாய் ஜீவனம்பண்ணிவந்தார். அவள் பண்டங்களை மேலே இரண்டு கீழே இரண்டாய்க் கொட்டிக் கவிழ்த்துக் குடித்தனத்தைத் தெருவிலிழுத்துவிடாமல், தன் புருஷனுடைய வரத்துக்குத்தக்கபடி செட்டுஞ்சீருமாய்ச் சம்சாரத்தைப் பரிபாலித்துவந்தாள். இதுவுமன்றி, பெண்களுக்கு வேண்டிய விவஹார ஞானமும் புத்திநுட்பமுமுள்ளவளாயிருந்தாள். ஹென்றி டேவிட் என்பவருக்குப் பிள்ளையுங்குட்டியுமாய் ஸம்ஸாரம் பலத்துப்போனதனாலும், பிள்ளைகளைப் படிப்பிக்கவேண்டுவது ஆவசியகமாயிருந்ததனாலும் அவைகளெல்லாம் பட்டணத்திலானால் அதிகச்செலவில்லாமல் நடக்குமேயென்று சுதேசத்தைவிட்டு அங்கே வந்து சேரவேண்டியதாயிற்று. அவருக்கு மூன்று பிள்ளைகள். இஸ்ஸபெல்லா என்று ஒரு பெண். இனி நாம் சொல்லப்போகிற தாமஸ் எர்ஸ்கின் என்பவர் அப்பிள்ளைகளிலிளையவர். அவர்களுக்குப் படிக்க வயதுவந்தபோது அப்பட்டணத்துப் பாடசாலைகள் ஒன்றில் படிப்பு சொல்லுவித்தார். அந்தப் பாடசாலை பிரதம

சிகைக்கு ஏற்றவிடமாயிருந்தது. அந்தப் பிள்ளைகள் தங்கள் வீட்டில் தங்களுக்குப் பூர்ணமாய் ஆகாரம் கிடைக்காமற்போனபோதிலும், அங்கே படிக்கிற பிள்ளைகளெல்லாம் தினந்தோறும் சாயங்காலம் கூடுகிற கூட்டத்தில் தங்கள் சிநேகிதர்கள் தங்களுக்குக் கொடுத்த ஆகாரத்தினாலும் ஜீவனம்பண்ணிக்கொண்டு கொஞ்சநாள் அங்கேயே படித்தார்கள். அவ்விடத்தில் தாமஸ் என்பவர் கொஞ்சம் தேர்ச்சியடைந்தார். இப்படி அங்கே இருக்கையில் இவர்கள் வீட்டுக்கு வருவார்போவார் அதிகமாயிருந்தார்கள். இவர்களுடைய ஸ்திதிப் பிள்ளைகளுக்குப் பாடசாலைச்செலவு கொடுக்கக்கூடப் போதாததாயிருந்தது. ஸெண்ட் ஆண்ட்ரூஸ் என்னும் பட்டணத்தில் பள்ளிக்கூடச்செலவு மிகவும் சொல்பமாயிருந்ததனால் தாங்கள் முன்னிருந்த பட்டணத்தைவிட்டு அங்கே போய்ச் சேர்ந்தார்கள். அங்கே விருந்தாளிகளும் அதிகமாயிராமலிருந்தது. அவ்விடத்துப் பாடசாலையில் அப்பிள்ளைகள்போய்ப் படித்தபோது அதிலும் தாமஸ் என்பவர் அதிக சுறுசுறுப்பும் சாமர்த்தியமும் ஞாபகசக்தியுமுள்ளவரென்று பேர்பெற்றார். இன்னும் வெவ்வேறு பாஷைகளும் கற்றார். அவ்விடத்தில் இவர்களுடைய செலவுகளெல்லாம் மிகவும் கொஞ்சமாயிருந்தும், அங்கேயும் வரும்படி போராமல் அவர்கள் வெகு சங்கடப்பட்டார்கள்.

ஸாதாரணமாய் அத்தேசத்தில் 2000 ரூபாய் வரும்படியுள்ளவர்கள்கூடத் தங்கள் வரும்படியைச் சாப்பாடுமுதலிய சொந்தச் செலவுக்கே செலவழித்துத் தங்கள் பிள்ளைகளைப் படிப்பிப்பதுமுதலியவைகளைப்பற்றிச் சிறிதும் கவனிக்கிறதேயில்லை; இந்த எரல் என்பவரோ அப்படியில்லை. பிள்ளைகளைப் படிப்பிப்பது தனக்குக் கடமையென்று அதில் அதிக கவனமாயிருந்தார். பெரிய பிள்ளையான டேவிட் என்கிறவனை பூர்ணமாய் வித்தையைக் கற்கவேண்டுமென்று லேடன்பட்டணத்திற்கு அனுப்பினார். ஹென்ரி என்கிற மற்றொரு பிள்ளை ஸ்காட்லெண்டுதேசத்து ராஜசபையில் வக்கீல் உத்தியோகம் பெறுவதற்காகப் படித்துக்கொண்டிருந்தார். இஸபெல்லாவோ பெண்களுக்குவேண்டிய விவகாரஞானமும் ஆட்டம்பாட்டம் முதலியவைகளும் நன்றாய்க் கற்றுக்கொண்டிருந்தாள்.

கடைப்பிள்ளையான தாமஸ் என்பவர்மாத்திரம் கொஞ்சம் ஸங்கட்டப்படும்படியாயிருந்தது; ஏனெனில் எரல் என்பவருடைய சொல்பவரும்படிக்குச் செலவு எவ்வளவு பார்த்தீர்களா? ஆகையால் அந்தக் குமாரனைப் படிப்பித்துப் பண்டிதனுக்குவதற்கு ஒரு வழியும் அவர்க்கு அகப்படாமல்போயிற்று. அந்தப் பிள்ளையைக் கொஞ்சம் சுதந்தரமாய் விட்டுவிட்டால் அவர் தண்டில்போய்ப் பூர வெகு உத்சாகமுள்ளவராயிருந்தார். அவருக்குக் கையிலொன்றுமில்லாமையால் தன்னெண்ணம் பயன்படாமற்போயிற்று.

அக்காலத்தில் ஒரு போர்க்கப்பலில் வேலைக்காரனாய்ப் பிரவேசிப்பதே அவருக்கேற்றதாய் இருந்தது; அதனால் ஒரு சிறுப்புடுப்பும் இறகுப்பாகையும் போட்டுக்கொண்டு கையில் ஒரு சிறுகத்தியோடு கப்பல்வேலையில் புகுந்தார். கொஞ்சநாள் அதேஜீவனமாயிருந்தது. முதல் முதல் ஒருதடவை கப்பலேறித் தேசாந்தரம் போய்வந்தார்.

அந்தக் கப்பல் உத்தியோகமானது கடலில்போவதும் வருவதும் மற்றுமுள்ள சில்லறைவேலைகளைச் செய்வதும் வெகு வருத்தமாயிருந்தது. ஆனாலும் இவர் தமது விடாமுயற்சியால் அதில் பிடிமானமாய் அந்த வேலையில் மேன்மேலும் பழகிக்கொண்டே வந்தார். கப்பற்சண்டைக்குவேண்டிய விஷயங்களும், கப்பல் நடத்தவேண்டிய வழிகளும் செம்மையாய்க் கற்றுக்கொண்டார். கொஞ்சநஞ்சம் ஒழிவுவேளைகளில் தாம் அப்பியசித்த பாஷைகளையும் விடாமல் விருத்திசெய்துகொண்டு ஸாதாரணமான விவஹாரஞானங்களிலும் பயிர்ச்சிசெய்துகொண்டேவந்தார். இப்படியிருக்கையில் கீழ்த்தேசத்திற்கு ஒருதடவை யாத்திரைபோம்படி நேரிட்டது. அத்தேசத்திற்குப் போனபோது அங்கே அத்தேசத்தைப்பற்றிய சங்கதிகளையும், அத்தேசத்து ஜனங்களின் நடவடிக்கைகளையும், ஜீவனோபாயத்திற்காக அவர்கள் படுகிற பிரயாசத்தையும் பார்த்தறிந்தார். அவ்விடத்திலிருந்து திரும்பும்போது அந்தவேலையில் அவருக்கிருக்கிற பிடிமானத்தையும் திறமையையும் புத்திபிரதிமைமுதலியவைகளையும் பார்த்து மெச்சி, அந்தக் கப்பலில் இரண்டாவது அதிகாரியன் உத்தியோகத்திற்குப் பதிலாளியாக அவரை ஏற்படுத்தினார்கள். அவருக்கு அந்த உத்தியோகமானது இன்னும் கொஞ்சநாளில் மேலான ஸ்திதிக்கு வரலாமென்று நினைக்கும்படியாயிருந்தது. ஆனால் அது பயன்படாமல்போய்விட்டது. அவர்கள் கரைவந்து சேர்ந்தவுடனே அந்தக் கப்பலை விற்றுப்போட்டார்கள். அதனால் அவர்க்கு அந்த வேலை போய்விட்டு அவர் படாதபாடும் பட்டார். அப்போது வேறு எந்தவேலையில் புகுவதற்கும் அவர்க்குச் சக்தியில்லை; வயதும் பதினெட்டாய் விட்டது. தகப்பனாரும் காலகதியை அடைந்தார். இனிமேல் வாழ்நாளைக் கழிப்பதற்கு அப்போது யாதொரு வழியும் தெரியவில்லை. அக்காலத்தில் அவருடைய கஷ்டஸ்திதியைக் கண்டாலும் கேட்டாலும் யாராவது இனி அவர் நல்லதசைக்கு வருவரென்று நினைப்பார்களா? அதிர்ஷ்டவிசேஷத்தால் அவர் பங்குக்குக் கிடைத்த சொல்ப பிதிரார்ஜிததனத்தை முன்பணங்கட்டிப் பட்டாளத்தில் ஒரு தாழ்ந்தஉத்தியோகத்தில் பிரவேசித்தார். 1768-ல் அந்த வேலை அவர்க்குக் கிடைத்தது.

அவர் அந்தத் தாழ்ந்தவேலையிலேயே இருந்துகொண்டு நின்றவிடத்தில் நில்லாமல் ஊர்மேலூராய் அல்லாடிக்கொண்டும், ஒழிந்த

வேளைகளில் அங்கங்கே தருமத்திற்காக வைத்திருக்கிற புத்தகசாலைகளில் பாஷைகளைக் கற்றுக்கொண்டும், மற்றவேளைகளில் ஆட்டம்முதலியவைகளைப் பயிற்சிசெய்துகொண்டும், தமக்குவேண்டிய விவகாரஞானங்களை அப்பியஸித்துக்கொண்டும் இரண்டுவெருஷகாலங்கழித்தார். 1770-ஆ ஒரு பெண்ணை விவாகஞ்செய்து கொண்டார். அந்தக் கன்னிகை நல்லகுலத்திற் பிறந்ததானாலும் விசேஷ அதிர்ஷ்டமுள்ளதன்று. அந்தக் கஷ்டதசையில் அவர் விவாகஞ்செய்துகொண்டது ஆலோசனையற்ற செய்கையாயிருந்த போதிலும், அதற்குப்பின் அவர்க்கு மேன்மேல் அபிவிர்த்தியுண்டாயிற்றேயன்றி கெடுதியொன்றும் நேரவில்லை. ஸம்ஸாரம் பலக்கவே அவர்க்கு வேலையில் ஊக்கமும் மனதில் ஒரு சுறுசுறுப்புமுண்டாயிற்று. இப்படியிருக்கையில் சேனைகளோடுகூட தூரதேசம் போம்படி நேரிட்டது. அப்படி நேரிட்டாலும், தம் ஸம்ஸாரத்தைக் கூட அழைத்துக்கொண்டுபோகலாமென்றுமாத்திரம் உத்தரவுகொடுத்தார்கள்; அப்படியே இரண்டுவருஷகாலம் வெளியே போயிருந்தார். அப்போதும் ஒழிவுகாலங்களில் நல்ல உயர்ந்த கிரந்தங்களையெல்லாம் படித்து அவைகளில் மேலான தேர்ச்சியடைந்து பண்டிதராயினார். பாலியத்தில் தாயார் போதித்திருந்த மதவிஷயங்களைப்பற்றியும் விசேஷமாய்ப் பரிசீலனஞ்செய்து அதிலும் வல்லவரானார். அவர் இவ்வளவு விசேஷ பாண்டித்தியம் பெற்றிருப்பதை அறிந்து சேனைகளுக்கு அந்தந்தச் சங்கதிகளை எடுத்து உபந்நியாஸஞ்செய்ய அவரை ஒரு குருவாக ஏற்படுத்தினார்கள். அப்போது அவருடைய உபந்நியாஸங்களைக் கேட்டவர்களுள் 'இவ்வளவு புத்திசூக்ஷ்மமும் திறமையும் விவேகமுமுள்ளவர்கள் உயர்ந்தபதவிக்கு வர எந்நேரஞ்செல்லும்' என்று ஆனந்தப்படாதவர்கள் யார்?

1772-ஆ மறுபடியும் எங்கிலாந்துக்கு வந்து லண்டன்நகரத்திலிருக்கையில் அதிக வல்லமையும் சாமர்த்தியமுமுள்ளவரென்று பேர்பெற்று 1773-ஆ அந்தச் சேனைகளுக்குத் தானே தலைவராயினார். ஆனாலும் அப்போதும் ஊரூராய்த் திரிகிற அலைச்சல்மாத்திரம் அவரை விடவில்லை. இம்மாதிரி வெகுகாலம் வித்தியாபிவிருத்தியும் பேரும் பிரஸித்தியுமுண்டாகும்படியான காரியம் ஒன்றுஞ்செய்யாமல் வீணாய்க் காலங்கழித்துவிட்டார். இன்னம் எத்தனைகாலம் அப்படியேயிருக்கலாம்! இதற்குமேல் அந்த மார்க்கத்தில் மேலுத்தியோகமுங்கிடையாது. அப்போது அவர் மனதிலும் நாம் வேறு உத்தியோகத்தில் மாறவேண்டுமென்கிற அபிலாஷை கொஞ்சமுண்டாயிற்று. ஒருநாள் தற்செயலாய் ஒரு ராஜசபைக்குள் நுழைந்தார். அச்சமயத்தில் அங்கே ஒரு வியவஹாரம் நடந்துகொண்டிருந்தது. அந்தச் சபையிலிருந்த நியாயாதிபதி இவரைப் பார்த்து பெரியமனிதன் பிள்ளையென்று கவுரவ

மாய் வரவழைத்து, ஆசனங்கொடுத்து, யோகக்ஷேமங்களையெல்லாம் விசாரித்து, அத்தருணத்தில் அங்கே நடந்துகொண்டிருந்த வியவஹாரஸங்கதிகளையும் அவருக்கு எடுத்துச்சொன்னார். அவைகளையெல்லாம் பார்த்தபோது எர்ஸ்கினுக்கு நாம் அவசியம் சட்டங்களைப்படித்து வக்கிலாய்ப் போகவேண்டும்; என்ன உபயோகமற்ற வேலைசெய்துகொண்டிருக்கிறோம் என்று ஒருவகைத் தீர்மானமுண்டாகி ஒரு பாரிஸ்டர் ஆவதற்கே முயன்றான்.

இப்போது இவர் மனந்திரும்பியிருக்கிறது மூன்றாவது வழியல்லவா? கொஞ்சநாள் கப்பல்சேவகனாயிருந்து கடலில் காலந்தள்ளினார். அப்புறம் சிலநாள் தரைச்சேனையிற் புகுந்து சிலகாலம் கழித்தார். இப்போ புதிதாய் ஒருவழி தோன்றிற்று. இப்படி அவர் ஒன்றிலும் நிலையில்லாமல் ஒன்றுவிட்டொன்றாய் மாறிக்கொண்டிருக்கிறது அவர் ஸகோதரர்கள் ஒருவர்க்கும் ஸம்மதமில்லை. அவருடைய வல்லமையும் புத்தியும் செம்மையாய்த் தெரியுமாதலால் அவர் தாயார்மாத்திரம் எப்படியாவது இவன் மேலான ஸ்திதிக்கு வருவனேதவிர வாராமற்போகமாட்டான் என்று நிச்சயித்திருந்தாள். அவர் நூதனமாய் ஆரம்பித்திருக்கிறது எவ்வளவு கஷ்டஸாத்தியமானகாரியம்! முதலில் M. A. பட்டம்பெற்றுப் பின்பு சட்டங்களைப்படிக்க ஆரம்பிக்கவேண்டும். அந்தப் பட்டம்பெற என்னவானாலும் மூன்றுவருஷத்துக்குக் குறையாது. தான் இருக்கிற வேலையில் இருந்துகொண்டே அவைகளையெல்லாம் எப்படிப் படிக்கமாட்டுவர். அந்த உத்தியோகத்தை விட்டுவிட்டால் உண்ணாச் சோறில்லாமல் அலைவதுமல்லாமல், ஓரிடத்தில் போய்ப் படிப்பதற்கும் பணமில்லாமல் அல்லாடத்தானேவேண்டும். அவர் இந்தச் சங்கடங்கள் ஒன்றும் தன்னண்டையணுகாமல் ஒரு வழி ஆலோசித்தார். உடனே ஆறுமாதத்திற்குச் செலவுகேட்டுக்கொண்டு கொஞ்சநாள் படித்துக்கொண்டிருந்தார். அப்போது அந்தப் பாடசாலையில் இவர் ரொம்பவும் சரியாய் நடந்துவந்ததனாலும் அவர் ஒரு பெரியமனிதனுடைய பிள்ளையாகையாலும் சில சுவாதந்திரியங்கள் கொடுத்திருந்தார்கள். ஆனாலும் அப்போது அவர் ஸங்கடம் இவ்வளவென்று சொல்லக்கூடாது. வரும்படி அடியோடு கிடையாது. ஸம்ஸாரமோ வரவர பிள்ளையுங்குட்டியுமாய்ப் பலத்துப்போயிற்று. அற்பமாய் ஸஹாயம்பண்ணவாவது சில நட்பாளர்களிருப்பார்களோவென்றால் ஒருவருமில்லை. இந்த வருத்தங்களையெல்லாம் எப்படியோ கடந்து தன் கருத்தை நிறைவேற்றினார். அவர் பெயர் பிரசித்தியாகவேண்டுவது ஒன்றுதான் குறையாயிருந்தது.

1778-ஞ ஜூலைமீ ஒரு கோர்ட்டில் பிரவேசித்து ஒரு லாயர் குமஸ்தாவாய் வேலைபார்த்துக்கொண்டிருந்தார். அப்படியிருக்

கையில் நவம்பர்மீ நல்லகாலம் பிறக்கக் காரணம் ஒன்று உண்டா யிற்று. ஒரு கப்பல்வர்த்தகன் ஏதோ ஒரு குற்றஞ்செய்ததாய்க் கீழ்க்கோர்ட்டில் ருஜுவாகி, பலமான சிக்ஷைசெய்யும்படி தீர்ப்பா யிற்று. அவன் மறுபடி மேல்கோர்ட்டில் அப்பீல்செய்யும்போது, எர்ஸ்கின் என்பவர் கப்பல்சங்கதிகளில் பழகினவரென்று அவரை யும் ஒரு லாயராக ஏற்படுத்தினன்.

ஒருநாள் எர்ஸ்கின் வீட்டில் உட்கார்ந்துகொண்டிருக்கையில் ஆரோ ஒருவன் வந்து கதவையிடித்தான். ஆரென்று கதவைத் திறந்துபார்க்கையில் கோர்ட்டுமனிதன் ஒருவன் வந்து பொன் மோஹரா ஒன்று அவர் கையிற்கொடுத்தான். கக்ஷிக்காரர்கள் லா யர்களை ஏற்படுத்தும்போது முதலில் ஏதோ ஒன்று கொண்டு கொ டுத்துக் காண்பது வழக்கம். எர்ஸ்கினுக்கு இது முதலில் வந்த திரவியம். ஆதலால், அதைச் ஸம்ஸாரத்திற்கு ஆஸ்தியாக பொக்கி ஷத்தில் வைத்துவிட்டார். அந்த விவஹாரத்திற்கு இவர்தவிர இன்னும் மூன்று வக்கீல்களுமிருந்தார்கள். கோர்ட்டில் விவஹா ரம் விசாரணைக்கு வரும்போது அம்மூன்றுபெயர்களும் அங்கே வெகுநாளாயிருக்கின்றவர்களாதலால் அவர்களே முதலில் பேச வேண்டியதாயிருந்தது; ஆனால் அம்மூவரும் ஒத்துப்போம்படி ஸ்தாபித்தார்கள். அன்றையதினம் அந்த மூன்றுபேர்களும் வாதி த்து முடிவதற்கே போதுபோதாமலிருந்ததனால் எர்ஸ்கின் பேச அவகாசமில்லாமல்போயிற்று. ஆகையால் அவரை மறுநாள் வா திக்கும்படி சொன்னார்கள். அப்படிச் செய்தது அவர் பேர் பிரசித் திக்குவர நல்லகாலமாயிருந்தது; ஏனென்றால் அன்றைக்கு நடக்க வேண்டியது எர்ஸ்கினுடைய உபந்நியாஸமொன்றுமேதவிர வே றில்லை; அதனால் அதிலுள்ள சிறுமையும் பெருமையும் அனைவர்க் கும் முக்கியமாய்த் தெரியுமல்லவா?

மறுநாள் 1778-ஆு நவம்பர்மீ 24௳ எர்ஸ்கின் சபை நடு வேவந்து, 'நான் வாதிக்கப்போகிற விஷயத்தை தயைசெய்து கேட் கவேண்டும்' என்று மெல்லியகுரலோடு சபையாரைவேண்டி விஷ யத்தை எடுத்துச் சொல்லும்போது, அங்கிருந்தவர்களெல்லாம் இவர் யார் புதிதாயிருக்கிறார், இவர் சொல்லுகிறவிஷயமோ வெகு நாளாய்ப் பழகினவன் சொல்வதுபோல் எவ்வளவு சரியாயிருக்கி றதென்று அதைக் கேட்டு மகிழ்ந்தார்கள். எர்ஸ்கின், 'இவரைச் சிறையிலாவைக்கிறது, ஒரு பெரிய அரண்மனையல்லவா கட்டிக் கொடுக்கவேண்டும்' என்று இப்படிப் பலவிதமாய் வாதித்துக் கடை சியில் அவன் குற்றவாளியல்லவென்று ஸ்தாபித்தார். விஷயங் களை எடுத்துச்சொல்லும்போது அதிக தைரியமாயும் கம்பீரமாயும் உபந்நியஸித்தார். அவருடைய வாதிக்குந்திறமையையும் உள் ளூற ஆஸ்தையோடு பேசுவதையும் அந்தந்த தருணங்களில் நுட்ப

மானவிஷயங்களை எடுத்துக்காட்டுவதையும் பார்த்துப் புகழாதவர்கள் யார்? அன்றையதினம் வாதித்துத் தன் கக்ஷிக்காரனுக்கு ஜெயமுண்டாக்கிக் கோர்ட்டைவிட்டுக் கீழே இறங்கும்போது கோர்ட்டு அடர்ணிகள் ஆயிரம்பேர், கையில் விவஹாரத்தையும் தனத்தையும் எடுத்துக்கொண்டு அவரைச் சூழ்ந்துவந்தார்கள். அப்போது ஒருவன் உமக்கு இவ்வளவு தைரியமாய்ப்பேச வல்லமை எப்படி உண்டாயிற்றென்று கேட்க, அவர் நானோ பேசினேன், என் வறுமையன்றோ பேசிற்று; நான் வீட்டுக்குப்போனால் பிள்ளைகள் நான்குபக்கத்திலும் 'அப்பா பழம் எங்கே, பலகாரம் எங்கே, பசிக்கிறதே' என்று பிச்சிப்பிடுங்குகின்றனவே என்றார். காலையில் அவ்வளவு தரித்திராயிருந்தவர் அஸ்தமயத்திற்குள் எவ்வளவு பெரும் பிரசித்தியும் ஆஸ்தியுமுள்ளவரானார்.

அன்றுமுதல் இம்மாதிரி எத்தனையோ விவஹாரங்களை எடுத்துக்கொண்டார். தான்பிடித்த சங்கதி ஒன்றும் தோற்றுப்போகாமல் எல்லாவற்றிலும் ஜயம்பெற்று வேண்டிய தனம் சம்பாதித்தார். அவருடைய நன்மையையும் ஜனங்களிடத்திலிருக்கிற ஆதரவையும் புத்திநுட்பத்தையும்பார்த்துக் கொண்டாடாதவர்கள் ஒருவருமில்லை. ஒருநாள் அட்மிரல் லார்டு கெப்பில் என்பவன் பிரான்ஸ் தேசத்தாரோடு நடந்த கப்பல்சண்டையில் ஏதோ ஒரு தப்பிதம் செய்ததாய் வியாஜ்ஜியம் வந்தது; அதையும் ஜெயித்துக்கொடுத்தார். அதற்காக அந்த அட்மிரல் அதிக நன்குமதிப்போடு பதினாயிரம் ரூபாய் வெகுமதிகொடுத்தான்.

இன்னும் இம்மாதிரி அநேக வியாஜ்ஜியங்கள் வந்தன. இவர் பிடித்த கக்ஷி ஜெயிக்கவில்லையென்கிற பேர் ஒருநாளும் கிடையாது. அவைகளைக்கூட நாம் வாயினால் சொல்லவேண்டுமோ? கொஞ்சநாள் அந்த வேலையிலேயே இருந்து அதிகமான மேதையும் பிரதிபையுமுள்ளவரென்றும் வல்லமையுள்ளவரென்றும் சரியானவரென்றும் அனியாயத்தில் பிரவேசியாதவரென்றும் பேர்பெற்று நியாயாதிபதியானார். இதுவரையில் அவரோடுகூட வறுமையில் அடிபட்டுக்கொண்டிருந்த அவர் மனையாட்டி அவருக்கு நல்ல தசைவரும்போது இருந்து சுகிக்கக் கொடுத்துவையாமல் இவ்வுலகத்தைவிட்டுப் போயினாள். அவரும் அதற்காக அதிக சோகமடைந்து மறுபடி மற்றொரு பெருமாட்டியை மணம்புரிந்து அவளோடுகூட மேன்மேலும் அபிவிருத்தாய் நெடுநாள் வாழ்ந்திருந்தார்.

தசகுமார சரிதம்.

மூன்றுவது:

ஸோமதத்தன் கதை.

முதலில் குமாரர்களுடைய பிறப்பின் வரலாற்றைச் செம்மையாய்ச் சொல்லி, பின்பு அவர்கள் யாத்திரை புறப்பட்டுப்போகையில் ஒருநாள் இராவில் ராஜகுமாரன் தன் தோழர்களை வஞ்சித்துப் போய் பிராமணனுக்குத் துணைசெய்துவந்து, தோழர்களைத் தேடிக் கொண்டுபோன வழியில் ஒரு உத்தியானவனத்தில் ஸோமதத்தனைக் கண்டதுவரையில் எழுதினோம்.

அந்த ராஜவாஹனன் ஸோமதத்தனைக்கண்டு ஸந்தோஷமடைந்து அவன் சரிதத்தைக் கேட்கவே, அவனும் சொல்லத்தொடங்கினான்:—

ஓ பிராணநாதனே! நாங்களெல்லாம் அன்றிரவில் தூங்கிக் காலையில் எழுந்துபார்க்கையில் உன்னைக் காணாமல் கண்கெட்டுப் போனவர்களாய்த் தேடும்படி புறப்பட்டோம். அப்படியே நான் தேடிக்கொண்டுவருகையில் வெயிலால் களைத்து விடாய்த்து ஓராற்றில் தண்ணீர்குடிக்கப்போனவிடத்தில் ஒரு மாணிக்கம் அகப்பட்டது; அதை எடுத்துக்கொண்டுபோகையில் வெயில் பொறுக்கமாட்டாமல் சற்றே படுத்திருக்கலாமென்று அங்கிருந்த ஒரு கோவிலில் நுழைந்தேன். அங்கே ஒரு ஏழைப்பிராமணன் குஞ்சுங்குட்டிகளுமாய்த் தவித்துக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்து: நீர் யாரென்று கேட்டதற்கு, அவன்: அந்தத் துக்கத்தை நீ ஏன் கேட்கிறாய்? குடிக்கக் கஞ்சிகிடையாது; இவையெல்லாம் தாயில்லாக் குழந்தைகள்; என்னவோ வைத்துக்கொண்டு அல்லாடுகிறேன் என்றான். அதைக்கேட்டு நான் பரிதாபப்பட்டு, அந்த மாணிக்கத்தை அவனுக்குக் கொடுத்துவிட்டு அங்கே சில சேனைகள் வந்து இறங்கியிருக்கக்கண்டு இதன் வரலாறென்னவென்று நான் கேட்டதற்கு, அவன்: மத்தகாலன் என்கிற லாடதேசத்தரசன், இத்தேசத்தரசன் மகளான வாமலோசனை என்பவள் அழகில் பெருத்த பவழக்கொடியென்பது கேள்விப்பட்டு, அவளைத் தனக்குக் கொடுக்கும்படி வேண்டினான். அதற்கு அவள் தகப்பனான வீரகேது சம்மதப்படாமையால் அவன்மேல் படைதூக்கினான். அதைக்கேட்டு வீரகேது பயந்து தன் மகளை அவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தான். தன் இஷ்டம் கைகூடவே மத்தகாலன் ஸந்தோஷமடைந்து தன் நகரத்திலேயே கலியாணஞ்செய்துகொள்ளும்படி தீர்மானித்துத் தன் பட்டணத்திற்குவாப் புறப்பட்டான். வீரகேதுவும் அளவற்ற வரிசைகளுடன் தன் மந்திரியான மானபால

ஞேடு தன் பெண்ணைக் கூட்டியனுப்பினுன். அவ்விரண்டு சேனை களும் இங்கே வந்திறங்கியிருக்கிறது. இப்போது வீரகேது மந் திரியான மானபாலன் தன் எஜமானனுக்கு நேரிட்ட அவமான த்தைச் சிறிதும் ஸகிக்கமாட்டாமல் இரண்டு கூடாரத்திற்கும் உள் ளேயே சுரங்கம்பண்ணியிருக்கிருனும். இவ்வளவுதான் நான் அறிவேனென்று சொல்லிவிட்டு, வெளியேபோயினுன். நானும் வழிநடந்துவந்த ச்ரமத்தால் கண்ணயர்ந்து தூங்கிப்போனேன். இன்னும் சில நிமிஷங்களுக்குள் அநேகர் உருவினகத்தியுருவின படியே அந்தப் பிராமணனைப் பின்கட்டுமுறையாய்க் கட்டி இழு த்துக்கொண்டுவந்தார்கள். அவன் என்னை எழுப்பி இதோ திரு டன் என்று என்னை அவர்களுக்குக் காட்டினுன். உடனே அவர் கள் அவனை விட்டுவிட்டு, நான் எனக்கு அந்த ரத்னம் கிடைத்த வழியை எவ்வளவு சொல்லியும் காதுகொடுத்துக் கேளாமல், என் னைக் கட்டிச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோய், இதோ உன் தோ ழர்கள் என்று அங்கே காலும் விலங்குமாய்க் கிடந்த சிலரை எனக் குக் காட்டி எனக்கும் விலங்குபோட்டுத் தள்ளிவிட்டுப் போய்வி ட்டார்கள். இவ்வளவு துன்பப்படுத்தியும் எனக்குக் கொஞ்சமும் மனங்கலங்கவில்லை. நடந்தகாரியத்தின் வரலாற்றை விவரமாய்த் தெரிந்துகொள்ளவேண்டுமென்று அங்கே இருந்தவர்களைப் பார்த்து நீங்கள் யார்? ஏன் இப்படி துன்பப்படுகிறீர்கள்? எனக்கு நீங்கள் தோழர் என்று சொன்னுர்களே? அதென்னவென்று கேட்டேன். அதற்கு அவர்கள் சொன்னதாவது: நாங்களெல்லாரும் மானபால னுடைய படைத்தலைவர்கள். அவர் கட்டளையினுல் மத்தகாலனைக் கொல்லும்படி சுரங்கவழியாய்ப் புகுந்துபோய்ப் பார்க்கையில், அங்கே அவனைக் காணுமையால் அவன் பொருள்களைக் கொள்ளை யாடிக்கொண்டு காட்டிற்கோடிப்போயினேம். மறுநாள் காலையில் அவன் சேவகர்கள் அநேகர் தேடிக்கொண்டுவந்து எங்களைக் கையும் சொத்துமாய்ப் பிடித்துக்கொண்டுபோய் அரசன்முன்னிலை யில் விட்டுப் பொருள்களைப் பரிசோதிக்கையில் அதில் சிறந்த மணியொன்று காணுமற்போயிற்று. அதைக் கொடாவிடின் கொ ன்றுவிடுவோமென்று எங்களைக் காவலில் வைத்தார்கள் என்று சொன்னுர்கள். அதுகேட்டு நான் எனக்கு அகப்பட்டது அந்த மணிதானென்று தெரிந்து, பிராமணனுக்கு அந்த மணியைக் கொ டுத்ததனுல் எனக்கு நேரிட்ட வருத்தத்தையும் நான் உன்னைத் தேடிக்கொண்டுவந்ததுமுதலிய என் சரிதங்களையும் சொல்லி அவர்களை நேசப்படுத்திக்கொண்டு, ஒருநாள் இரவில் யாவர்க் கும் விலங்குகளைத் தறித்துவிட்டு அவர்களோடுகூடப் புறப்பட்டு வாசலில் தூங்கிக்கிடந்த காவலாளர்களுடைய ஆயுதங்களை எடுத் துக்கொண்டுபோய் வழியில் வந்து தகைந்த சில நகரசோதகர்க ளைக் கிட்டநெருங்கவொட்டாமல் துரத்தியடித்து மானபாலனுடைய

வீட்டிற்குப் போனேன். அங்கே அவன் என் நடத்தையைக் கேட்டுச் சந்தோஷமடைந்து தன் அபீஷ்டம் நிறைவேறினதாகவே நினைத்திருந்தான். மறுநாள் காலையில் மத்தகாலன், ராத்திரி விடுபட்டுக்கொண்டு இவனைவந்து சரணமடைந்த சில கள்ளர்களை விட்டுவிடும்படி கட்டளையிட்டுத் தூதர்களை அனுப்பியதற்கு, மானபாலன் தகுந்தவிடைகொடாமல் வெருட்டியனுப்பவே, அவன் கோபங்கொண்டு உடனே சண்டைபோடவந்தான். அப்படியே இரண்டுசேனைகளும் போராடிக்கொண்டிருக்கையில் நான் சரேலென்று புறப்பட்டு,எதிர்த்தவர்களை அறுத்துக்கொண்டுபோய் மத்தகாலனுடைய தேரில் ஒரு குதியாய்க் குதித்துக் கையிலிருந்த கத்தியால் அவ்ன் கழுத்தைத் தறித்தேன். அரசன் கொலையுண்டு கீழேவிழவே மற்ற மிகுந்தசேனைகளெல்லாம் என்னையே சரணமடைந்தன. அவ்வளவு சேனைகளையும் கூட்டிக்கொண்டு ஜயசீலனான மானபாலன் தன் கூடாரத்திற்குப்போய் எனக்கு மிக்கமரியாதை செய்வித்துப் போாநந்தமடைந்தான்.

இச்செய்திகேட்ட வீரகேதுமகாராஜன் எதிர்கொண்டுவந்து என்னை மிகுந்தமரியாதையோடு தன் பட்டணத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் ஊர்வலம்வந்து மகா வைபத்துடனே அக்கன்னிகையை எனக்குக் கலியாணஞ்செய்வித்தான். பின்பு அந்தப் பட்டணத்திலேயே இளவரசுப்பட்டங்கட்டிக்கொண்டு சகல ராஜகாரியங்களும் நானே பார்த்துவந்தேன். அவ்வளவுபோகமாய் இருந்தும் உன்னைப் பிரிந்துபோன துக்கம் அறுபதுநாழிகையும் என் மனதை உறுத்திக்கொண்டேயிருந்தது. இப்போது ஒரு முனிவர்சொன்ன வாக்கியத்தைக்கேட்டு உன்னைக் காணும்படி இந்தத் தோட்டத்திற்கு வந்தேன்; அப்படியே தெய்வகடாக்ஷத்தால் உன்னைக்கண்டு களிக்கும்படி நேரிட்டது. இதைவிட எனக்குச் சந்தோஷம் வேறொன்றுமில்லை என்று ஸோமதத்தன் சொல்லவே, ராஜவாஹனன் அவன் பராக்கிரமப் பெருமையைக் கேட்டு ஸந்தோஷப்பட்டுத் தன் சரிதங்களையும் ஆதியோடந்தமாய் அவற்கு உரைத்தான்.

இப்படி இவர்களிருவரும் தூஹலமாயிருக்கையில் எதிரே புஷ்போத்பவன் வருவதைக்கண்டு ராஜவாஹனன் களிப்புற்று, அப்பா, புஷ்போத்பவா! நீ இப்போது எங்கிருந்து வருகிறாய்? நான் போவது உங்களுக்குத் தெரிந்தால் நீங்கள் அதற்கு இடையூறுசெய்வீர்களென்று நினைத்து, நீங்களெல்லாரும் தூங்கிக்கொண்டிருக்கையில் உங்களை மோசஞ்செய்து நான் போய்விட்டேனே! அப்புறம் நீங்கள் எவ்விதமானீர்கள்; நீ எங்கெங்கே சுற்றிவிட்டுவருகிறாய் என்று கேட்டதற்கு, அந்தப் புஷ்போத்பவன் ஸந்தோஷத்தால் அவனை ஆலிங்கனம்பண்ணிக்கொண்டு தன் கதையைக் கூறலாயினான்:—

(இன்னும் வரும்.)

சமாசாரம்.

ப்ரின்ஸ் ஆப் வேல்ஸ் யாத்திரைப் பணச்செலவு.—ஜூலைமீ 16வ இராத்திரி ஜனப்பிரதிநிதிசபையில் மெஸ். பாஸிட்துரை நமது இளவரசராகிய ப்ரின்ஸ் ஆப் வேல்ஸ் இந்தியாவுக்குப் போவதனால் உண்டாகும் செலவைப்பற்றிப் பேசி, சிலர் அபேட்சிக்கிறபடி, அங்கிலேய துரைத்தனத்தார் பாதி, இந்திய துரைத்தனத்தார் பாதியாகத் தாங்கவிடாமல், அங்கிலேயரே உதாரமாய்ச் செலவுமுழுதையும் தாங்கிக்கொள்வது உத்தமமென்று வற்புறுத்தினார். பிரதான மந்திரி முதலானவர்கள் அதைத்தொட்டுத் தங்கள் கருத்துகளை வெளிவிட்டதன்மேல், பார்லிமெண்டார் பிரதான மந்திரி கொண்ட அபிப்பிராயத்தின்படி, இந்திய துரைத்தனத்தாரும் அங்கிலேய துரைத்தனத்தாரும், உண்டாகும் பணச்செலவைப் பகுத்துத் தாங்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். இளவரசர் முதலில் பம்பாயில்வந்திறங்கி, பிறகு வருகிற டிசெம்பர்மீ முதல்வாரத்தில் நமது சென்னைநகரில் விஜயம்செய்வாராம்.

ஸ்தூலித்த ஸ்திரீ.—அமெரிக்காவில் ஆச்சரியமானவிதமாய் ஸ்தூலித்திருந்த ஒரு ஸ்திரீ சிலநாளைக்குமுன் இறந்துபோனாள். அவள் தேகத்தின் எடை 573—ராத்தல், இடைச்சுற்றளவு இரண்டுகெஜம், உயரம் ஆறடி நாலங்குலம்.

பருத்திநூல்.—இதுவரையில் சீமையிலிருந்து வந்து இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் கீழ்த்தரமான பருத்திநூலுக்குத் தீர்வைகொடுப்பது வழக்கம். அங்கிலோ இந்திய பிரதானமந்திரி அந்தத் தீர்வையை நிறுத்தப்போகிறாராம்.

கடிகாரங்களை உண்டாக்கும் நீராவியந்திரங்கள்.—அமெரிக்காதேசத்தில் உள்ள சில தொழிலாளிகளால் இந்த யந்திரங்கள் மிக சூக்ஷமமாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன. வேலை மிகு திருத்தமும் நிதானமுமாய் இந்த யந்திரத்தினாலே செய்யப்படும். ஒருநாளில் முந்நூறு கடிகாரங்கள் முடிந்ததாகச் செய்யப்படுகின்றன. சென்ற வருஷம் ஒரு லக்ஷம் வெள்ளிக்கடிகாரங்களும், பதினாயிரம் பொற்கடிகாரங்களும் மேற்படி சாலையில் செய்யப்பட்டன. மேற்படி யந்திரத்தையும், அது செய்துவருகிற வேலைப்பாட்டையும் பார்த்திருக்கிற சில என்ஜினீர் துரைமார் இனிப் பூலோகத்தில் உபயோகிக்கப்படும் கடிகாரங்கள் கையினால் அல்ல, யந்திரத்தினாலேயே நிர்மாணிக்கப்படுமென்று உத்தேசிக்கிறார்கள். மேற்படி தொழிற்சாலையில் ஆயிரம் பெயருக்குமேலே வேலைசெய்வார்கள் உண்டு. அவர்களில் பாதிப்பெயர் சிற்றாள்கள்.

சிறுவரைச் சீராக்கும் பள்ளிக்கூடங்கள்.—ஸிம்லாவில் ஜூலைமீ 29வ சட்ட நிர்மாணசபை கூடியபொழுது இந்தியாவைச்சேர்ந்த சில ஊர்களில் சிறுவர்களைத் திருத்தி, அவர்களுக்குக் கல்வி கைத்தொழில்களைக் கற்றுக்கொடுக்கும்படி பள்ளிக்கூடங்கள் அவசியம் வேண்டுமென்றெண்ணி, கவர்னர் ஜெனரலவர்களுடைய சட்டநிர்மாணசபையில் அந்தக் காரியத்திற்குத்தக்க ஒரு சட்டம் ஸ்ரீ. எ. ஜெ. ஆர்பத்நட் துரை கொண்டுவர உத்தரவுகேட்டார்.



THE TAJ MAHAL AT AGRA.

அகராவிலுள்ள தாஜ்மஹால் என்னும் கோரி.